# ஸெய்னப்

# සෙය්නබ්

# ZAINAB

Zainab Muslim Girl's Primary School

Established 2008

Let's Learn In the Name of Allah Who Taught by Pen

ZAINAB

**-31.01.2008-**

பு/ஸெய்னப் முஸ்லிம் மகளிர் கனிஷ்ட வித்தியாலயம்

~ ஒரு புதிய கல்வி வரலாற்றின் ஆரம்பம் ~

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# When you drink Highland milk the country gets stronger, too !

Buy Highland milk and you help about 100,000 farmers in 2000 villages to support themselves. You help generate employment in rural Sri Lanka. How ? all Highland milk and milk products are made only from fresh locally produced milk. Also they are high in nutrition. Which means you too get stronger.


Highland

MILCO

දේශයේ අභිමානය

With best compliments from

MILCO (PVT) LTD.
45,Nawala Road ,Narahenpita,Colombo 05
Tel:4510962
www.milco.lk




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸெய்னப்

# සෙයිනබ් Zainab

## பு/ஸெய்னப் முஸ்லிம் மகளிர் கனிஷ்ட வித்தியாலயம்
## திறப்பு விழா
## நினைவு மலர்

வெளியீடு
கால்நடை வள அபிவிருத்தி பிரதியமைச்சர் கெ. ஏ. பாயிஸ் அவர்களின்
புத்தளம் மாவட்ட அபிவிருத்திக்கான ஆலோசனைக் குழு.
31-01-2008

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டைப்படம்:- நஸ்மன் ஸன்ஹா ஸன்ஹிர்

# පණිවිඩය



පුත්තලම සෙයිනබ් මුස්ලිම් බාලිකා ප්‍රාථමික විද්‍යාලය විවෘත කිරීම නිමිත්තෙන් එළිදක්වනු ලබන සමරු කලාපය සඳහා සුබ පැතුම් පණිවුඩයක් නිකුත් කරනුයේ අසීමිත සතුටකිනි.

නගරයේ පාසැල් සඳහා සිසුන් ඇතුලත් කිරීම තරඟයක්ව පවතින අවස්ථාවක මෙවන් විදුහලක් ආරම්භ කිරීමට ලැබීම එම ගැටළුවට යම් විකල්පයක් ලෙස මම දකිමි.

මෙම තත්වය ජාතික ගැටළුවක් බවට පත්ව තිබේ. එහෙයින් ඊට විකල්ප ක්‍රියා මාර්ග සොයා ගැනීම තුලින් දරුවාගේ අධ්‍යාපනය කරගෙන යාමට අවස්ථාව සලසා දීම අධ්‍යාපන බලධාරීන් ලෙස අපගේ සුතුකමක් මෙන්ම වගකීමක්ද වන්නේය.

එහෙයින් වයඹ පළාතේ පිහිටි අධ්‍යාපන කලාප 08 ආවරණය වන පරිදි ජනාධිපති විද්‍යාල 08 ක් ආරම්භ කිරීමට හැකියාව ලැබීම අප ලද ජයග්‍රහණයකිග ක්‍රීඩා පාසැල් මෙන්ම කුලියාපිටිය නගරයේ අලුතින් ආරම්භ කරන ලද විශාකා කාන්තා විදුහලද මෑත කාලයේ අප විසින් ආරම්භ කරන ලද පාසැල් අතර වේ.

දරුවන්ගේ අධ්‍යාපන සංවර්ධනය උදෙසා වයඹ පළාත තුල නවෝද්‍ය පාසැල් 53 කට වැඩි ප්‍රමාණයක් ආරම්භ කොට තිබේ. වැසී යාමට ආසන්නව පැවති පාසැල් රැසක් නැවත සාර්ථක පාසැල් බවට පත්කිරීමට හැකිවීම වයඹ අධ්‍යාපනයට නව රුකුලකි. එමෙන්ම පළාත තුළ ඇති පාසැල්වල අධ්‍යාන සංවර්ධනයේ නව ප්‍රවණාතාවයක් වශයෙන් ඉංග්‍රීසි මාධ්‍යයෙන් අධ්‍යාපන කටයුතු කිරීමට අවස්ථාවක් සලසා දීමද මෙහිදි කැපී මෙනෙනු ඇත.

අධ්‍යාපන මට්ටම අතින් වටඹ පළාත බස්නාහිර පළාතට නොදෙවෙනි ස්ථානයකට පත්ව තිබේ. එය පළාතේ ජීවත්වන අප සෑම ලද භාග්‍යකි. මේ සඳහා අධ්‍යාපන ක්ෂෙත්‍රයේ නියුතු සියළු දෙනාගේ දායකත්වය මනා පිටු වහලක් වූ බව මාගේ විශ්වාසයයි.

මෙවන් පසුබිමක් තුල අද දින ආරම්භ කෙරෙන පුත්තලම සෙයිනබ් මුස්ලිම් බාලිකා ප්‍රාථමික විද්‍යාලය දියුණුවෙන් දියුනුවට පත්වේවායි ප්‍රාර්ථනා කරමි.

අතුල විජේසිංහ
ප්‍රධාන අමාත්‍ය
වයඹ පළාත

ප්‍රධාන අමාත්‍ය කාර්යාලය.
පළාත් සභා කාර්යාල සංකීර්ණය
කුරුණෑගල.
2008-01-31



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிச் செய்தி



31. 01. 2008 இன்று பாத்திமா'' வின் தங்கை செய்னப்'' ஜனனித்துவிட்டாள்.........

இது'' நடக்காது என்றும், நடக்க விடமாட்டோம் என்றும் விடப்பட்ட சவால்களை சமாளித்துக் கொண்டு இம்மாபெரும் வரலாற்றுச் சாதனை நடாத்தப்படுகிறது.

அல்ஹம்து லில்லாஹ்.

நாம் எதிர்கொள்ளும் நமது நாட்டின் 60ஆம் சுதந்திர தினத்தில், நமது பிரதேசத்தில் 60வது தமிழ்மொழிப் பாடசாலையாக செய்னப்'' பரிணமித்திருக்கின்றாள்.

இதன் மூலம் பின்னடைவுக்குட்பட்டுள்ள நமது பிரதேசக் கல்வியை புதிய சிந்தனையின் அடிப்படையில் துரிதமாக முன்னேற்றும் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் நமது கல்வித் துறையை பழைமை வாத நடவடிக்கைகளிலிருந்து மீட்டெடுத்து, நவீன மாற்றங்களை உட்புகுத்தி இன்றைய உலகின் சவால்களை எதிர்கொள்வதற் கேற்றவாறு நமது மாணவச் செல்வங்களை உருவாக்குகின்ற பயணம் ஆரம்பித்து வைக்கப்படுகின்றது.

புத்தளத்து நந்தவனத்தில் "செய்னப்" என்ற புத்தம் புது மலர் புஸ்பிக்கப்பட்டிருக்கிறது. இம்மலரின் உருவாக்கம் ஒன்றும் தற்செயல் நிகழ்வல்ல. அதற்குப் பின்னால் ஒரு நீண்ட வரலாறு இருக்கிறது. செய்னப்'' என்ற புதிய மலரை பற்றிக் கணவு கண்டோர், திட்டமிட்டோர், அதற்காகப் பாடுபட்டோர் இதுவரையும் அதற்காக முழு மூச்சாக உழைத்தோர் மாத்திரமன்றி இடை நடுவில் சதி செய்தோர் என்று இப்பட்டியல் நீண்டு செல்கிறது.

எது எப்படி இருப்பினும் சுகப் பிரசவமாக செய்னப்'' என்ற நமது கல்விக் குழந்தை பாத்திமாவின் தங்கையாக அவதரித்தது மாத்திரமன்றி , ஒரே வீட்டுக்குள் வாழவும் தயாராகிவிட்டாள்.

நமது கல்விமான்களும், பெற்றோர்களும், நமது பிரதேசக் கல்வியின் வீழ்ச்சி பற்றி பிரஸ்தாபிக் கின்றபோது அதைப்பற்றிய நீண்ட ஆராச்சியின் பின் நாமும், நமது ஆலோசனைக் குழுவும் ஒரு திடமான முடிவுக்கு வரமுடிந்தது. இதற்குப் பல மாதங்கள் செலவிடப்பட்டிருக்கின்றன.

பெறுமதியான ஆலோசனைகளும், அழகான திட்டங்களும் நம்மிடம் எவ்வளவுதான் இருந்தாலும் முழுமையான அரசியல் அதிகாரம் நமது கரங்களுக்குக் கிடைக்காத வரை அவற்றை நிறைவேற்ற முடியாது என்பதை கடந்த காலங்களில் நிதர்சனமாகக் கண்டோம்.

எனவேதான் இன்றைய புதிய அரசியல் மாற்றத்தின் ஊடாக அதிகாரம் நமக்குக் கிடைத்தவுடன் உடனடியாகச் செயற்பட்டு முதல் நடவடிக்கையாக நமது பிரதேசக் கல்வியைச் சீர்படுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளோம். அதன் முதற் கட்டம்தான் இன்று நிறைவேற்றி வைக்கப்படுகிறது.

நமது பிரதேசத்தின் கல்வியின் வீழ்ச்சி சரியாக உணரப்படுவதற்கு காரணமாக அமைந்தது , எமது முன்னணிப் பாடசாலைகளிலிருந்து உயர்தர விஞ்ஞான பாட மாணவர்கள் வெளியூர்களுக்குப் புலம் பெயர ஆரம்பித்ததும், அதனால் ஏற்பட்ட சலசலப்புகளுமாகும்.

புத்தளம் சாகிரா, பாத்திமா, கற்பிட்டி அல்-அக்ஸா, சிலாபம் நஸ்ரிய்யா என பெயர்பெற்ற பாடசாலைகள் நமது பிரதேசத்தில் இருந்தும் கூட இன்றைய கல்வி நிலை மிகவும் பின்னடைந்திருப்பதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாரும் மறுதலிக்க முடியாது. இது அரசியல் அதிகாரம், சமூகச் சிந்தனை, சூழ்நிலை, சமூகப் போட்டி என்ற பல காரணங்களில் தங்கிநிற்கிறது.

எனவேதான் தற்போது நமக்குக் கிடைத்துள்ள அரசியல் அதிகாரங்களை முழுமையாகப் பாவித்து சமூக சிந்தனைகளை மேம்படுத்தி, புதிய சூழ்நிலைகளை உருவாக்கி, சமூகப் போட்டியுடனான கல்விக்கு நமது மாணயவர்களை தயார் படுத்துகின்ற பணியை நாம் எல்லோரும் ஒன்றிணைந்து செயற்படுத்த வேண்டியுள்ளது.

அதற்காக பல படிமுறை வேலைத் திட்டங்களை நாம் செயற்படுத்த வேண்டியுள்ளது.

01 அளவுக்கதிகமாக மாணவர்களை வைத்துக்கொண்டு நிருவாகச் சிக்கல்களுக்கிலக்காகி தட்டுத் தடுமாறிக் கொண்டிருக்கின்ற பாடசாலைகளை இரண்டாகப் பிரித்து இரு வெவ்வேறு பாடசாலைகளை உருவாக்கல்.

02. முதலாம் வகுப்பிலிருந்து ஐந்தாம் வகுப்பு வரை அல்லது முதலாம் வகுப்பிலிருந்து ஒன்பதாம் வகுப்பு வரை என்ற ஆரம்பப் பாடசாலைகளை உருவாக்கல்.

03. ஆறாம் வகுப்பிலிருந்து பதின் மூன்றாம் வகுப்புவரை அல்லது ஒனதாம் வகுப்பிலிருந்து பதின் மூன்றாம் வகுப்பு வரை எனிற இரண்டாம் நிலைப் பாடசாலைகளை உருவாக்கல்.

04. எல்லாப் பாடசாலைகளுக்கும் உயர்தரம் என்ற நிலையை மாற்றி சிறந்த உயர்தரப் பாடசாலைகளாக ஒரு சிலதை முழு ஆசிரியர் மற்றும் ஏனைய வள்ங்களை உருவாக்கல்.

05. உயர்தரத்தில் விஞ்ஞானம், வர்த்தகம், கலை என்று பாடசாலைகளை இனங்கண்டு ஏதாவது ஒரு துறையில் மாத்திரம் அவற்றை அபிவிருத்தி செய்தல்

06. தரமான அதிபர், உப அதிபர் மற்றும் நிருவாகக் குழுக்களை சகல பாடசாலைகளிலும் நியமித்தலும் அவர்களின் பிரச்சினைகளைக் கண்டறிந்து உதவுதலும்.

07. மாணவர்களை ஆரம்பத்திலிருந்தே நமது இலக்கை நோக்கி வழிப்படுத்தல்

அதே போன்று இன்று சகல பாடசாலைகளிலும் கற்கின்ற நமது மாணவர்கள் அவர்களின் இலக்குகளை சரியாக அடைய முடியாது தட்டுத் தடுமாறிக் கொண்டிருக்கின்ற நிலைமை தொடர்கின்றது.

அதற்காக ஒரு வகுப்பில் இருக்கின்ற மாணவர்களை மூன்றாகப் பிரித்து பரீட்சையில்

1) முதலாமிடத்திலிருந்து - இருபதாம் இடம்,

2) இருபத்தோராம் இடத்திலிருந்து முப்பதாம் இடம்

3) முப்பத்தோராம் இடத்திலிருந்து நாற்பதாம் இடம்

என்று மாணவர்களை வகைப்படுத்தி ஒன்றிலிருந்து இருபதுக்குள் வருகின்ற மாணவர்களை ஒரு பாடசாலைக்கு அனுப்பி அவர்களை பல்கலைக் கழக கல்வியை நோக்கி வழிப்படுத்தல், இருபத்தொன்றிலிருந்து முப்பதுக்குள் வருகின்ற மாணவர்களை இன்னொரு பாடசாலைக்குச் சேர்ப்பித்து கணிணித் துறை, கணக்கியல், முகாமைத்துவம் போன்ற துறைகளுக்கு வழிப்படுத்தல், முப்பதிலிருந்து நாற்பதைத் தாண்டி வருகின்ற மாணவர்களை தனியே தொழில் நுட்பக் கல்விக்கு வழிப்படுத்துவதோடு தனித் தனிப் பாடசாலைகளை அதற்கேற்றவாறான வளங்களை எற்படுத்தி மாணவர்களை அவர்களின் மூளை வளத்துக்கேற்றவாறு வழிப்படுத்த வேண்டிய அவசியம் நமக்கிருக்கிருக்கிறது என்பதையும் நாம் உணர்ந்துள்ளோம். அவ்வாறு செய்கின்றபோது மாத்திரம்தான் நமது மாணவர்கள் அத்தனைபேரும் இறுதியில் தம்மை கல்வியின் ஏதோ ஒரு துறையில் தடம் பதிக்கச் செய்ய முடியும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த புதிய சிந்தனையை பரீட்சித்துப் பார்கின்ற முதற் தளமாக ஸெய்னப்'' முஸ்லிம் மகளிர் கனிஷ்ட பாடசாலை அமையும் என்ற நம்பிக்கை நமக்கிருக்கிறத.

நமது சடுதியான கல்வி அபிவிருத்தித் திட்டப் பபணத்தில் அடுத்தடுத்து , புத்தளம் சாகிரா , கற்பிட்டி அல் அக்ஸா, அக்கரைப்பற்றின் முன்னணிப் பாடசாலைகள் , சிலாபம் நஸிரிய்யா, நாத்தாண்டிய மற்றும் ஏனைய மதப்பாடசாலைகள் என்று எமது பார்வையை திருப்ப இருக்கின்ற அதே வேளை ஏனைய சிறிய பாடசாலைகளையும் கூட தரமுள்ள பாடசாலைகளாக மாற்றகின்ற திட்டங்களையும் அறிமுகப்படுத் தவுள்ளோம். இன்ஷா அல்லாஹ்

கல்வி அபிவிருத்திக்கான இம்முயற்சிகளில் தங்கள் அனைவரினதும் ஆலோசனைகளை எதிர் பார்த்து நிற்பதோடு ஒனறிணைந்து செயற்பட வருமாறும் அழைப்ப விடுக்கிறோம்.

ஸெய்னப்'' என்ற இப்பாடசாலையின் தந்தையாகக் கருதப்படுகின்ற எனது பிரத்தியேகச் செயலா ளர் சகோதரர் எம.எஸ். அப்பாஸ் அவர்களுக்கும், அவரோடிணைந்து இதற்கான ஆரம்ப சிந்தனையை வெளிப்படுத்திய சகோதரி நஸ்லிய்யா காதர், சகோதரர் எஸ்.ஆர்.எம். முஹ்ஸி (நகர சபை உறுப்பினர்) சகோதரர் எ இஸட்.ஏ.எம் . ரஸ்மி ஆகியோருக்கு எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதற்கான அனுமதியைப் பெறுவதில் பாடுபட்டுழைத்த நமது மாகாண சபை உறுப்பினர் சகோதரர் எஸ்.ஏ. யஹ்யா, தலைமையிலான மாகாண சபை உறுப்பினர்களுக்கும், சகோதரர் என்.டீ.எம். தாகீர் மாகாண சபை உறப்பினருக்கும் அத்தோடு பாயிஸ்-அத்துல உடன்படிக்கைக்க இயைவாக அனுமதி நந்த முதலமைச்சர் கௌரவ அத்துல விஜேசிங்க, மாகாண கல்விப் பணிப்பாளர் திரு அசோகா ஜயசிங்ஹ, புத்தளம் வலய பிரதி கல்விப் பணிப்பாளர் (தமிழ் அலகு) ஜனாப் ஜவாத் மரிக்கார், இஸட். ஏ.சன்ஹீர் உட்பட கல்வித் திணைக்கள சகல உயர் அதிகாரிகளுக்கும், புத்தளம் நகர சபைத் தலைவர் கௌரவ எம்.என்.எம். நஸ்மி உட்பட நகர சபை உறுப்பினர்கள், அதிகாரிகளுக்கும் எனது நன்றிகள்.

அத்தோடு இதன் உருவாக்கத்துக்கு இரவுபகலாகப் பாடுபட்ட இவ்வேட்டில் பெயர் குறிப்பிடப்பட் டுள்ள எமது புத்தளம் மாவட்ட அபிவிருத்திக்கான ஆலோசனைக் குழு உறுப்பினர்களுக்கும் எனது விஷேட நன்றிகளை தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

இந்தப் பிரிவை தமக்குள் உள்வாங்கிக் கொண்ட பாத்திமாவின் அதிபர் ஜனாபா சுமைய்யா ரிஸவான் உட்பட பாடசாலை அபிவிருத்தி சங்க உறுப்பினர்களுக்கும் இப்பாடசாலையை உடனடியாகப் பொறப்பேற்று நடாத்த முன்வந்த ஜனாபா பெலிஜிய்யா அவர்களுக்கும் ஏனைய ஆசிரியைகளுக்கும் எனது மனமார்ந்த நன்றி.

நம்மை நாமே ஆளுகின்றன இலட்சியப் பயனத்தில் நமது சடுதியான அபிவிருத்தியின் ஒரு துளி நிறைவேறும் இவ்வேளை, எம்மோடு கைகோர்த்து நிற்கும் அனைத்து நல்லிதயங்களுக்கும் எமது நன்றிகள்.

நன்றி.

அன்புடன்,

கே.ஏ. பாயிஸ் - பா.உ
கால்நடை வள அபிவிருத்தி பிரதி அமைச்சர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிச் செய்தி



புத்தளத்தின் புதிய அத்தியாயமாக மலரும் ஸெய்னப் முஸ்லிம் மகளிர் கனிஷ்ட பாடசாலையின் திறப்பு விழாவினையொட்டி வெளியிடப்படும் நினைவு மலருக்கு வெறுமனே ஆசிச் செய்தி வழங்கும் ஒரு அரசியல் பிரமுகராக இராது, புதிய ஸெய்னபின் பிறப்புக்கு வழிவகுத்தவர்களில் ஒருவனாக இருந்து, அதன் பிறப்புக்காகப் பாடுபட்டு, அது அங்கீகரிக்கப்படும் நாளில் வடமேல் மாகாண முதலமைச்சரின் அருகிலிருந்து, அதை அவர் திறந்துவைக்கும் நன்நாளில எல்லோரிடமிருந்து அதைக் கண்ணாறக் கண்டு களிக்கும் ஒருவனாக நானடையும் இன்பத்தைச் சொல்ல வார்தைகள் இல்லை.

புல வைத்தியர்களால் வைத்தியம் செய்யப்பட்டு கைவிடப்பட்ட நோயாளியை ஒரு விஷேட வைத்தியரிடம் கொண்டு வருவதைப் போலத்தான் பிறப்புக்காகப் போராடிக் கொண்டிருக்கும் ஸெய்னப்பை என்னிடம் கொண்டு வந்தார்கள் அவள் பிறப்புக்காகத் தவித்தவர்கள். அந்தப் பிரச்சினையை நான் பொறுப்பேற்றுக்கொண்ட தருணம் மிக நெருக்கடியானது என்பதை யாரும் புரிந்து கொண்டிருக்கவில்லை.

புதிய ஸெய்னப் பாடசாலையை அங்கீகரித்தெடுக்க அரசியல் சதுரங்க ஆட்டம் ஒன்றை ஆட வேண்டி இருந்தது என்பதையும், சர்ச்சைக்குரிய விடயம் ஒன்றுக்கு இணங்கிக் கையொப்பமிடுவதன் மூலமே அதைச் செய்ய வேண்டியிருந்தது என்பதையும் வரிவரியாக விளக்குவதற்கு இந்த மலர் இடமளிக்காததால் அதைவிட்டு விடுகிறேன்.

புதிய பாடசாலைக்கான அங்கீகாரத்துக்காக நான் எடுத்துக்கொண்ட சிரமத்தைவிட அதை இன்று திறந்து வைப்தற்காக கௌரவ கால்நடை வள பிரதி அமைச்சருடன் சேர்ந்து செய்ய வேண்டிய போராட்டம் மிகச் சிரமமாக இருந்ததை வேதனையுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன். காலத்துக்கேற்ற மாற்றங்கள் நிகழுகையில் மாறிக்கொள்ளத் தயங்கும் நம் சமூகத்தின் சிலரோடு நாம் பெரும் போராட்டம் நடத்தினோம இந்த நிமிடம் வரையிலும் நடாத்திக் கொண்டிருக்கிறோம்.

ஒரு காரியம் நடைபெறும்போது அது கொண்டுவரும் நலன்களை மறைத்து அதை வேறுவிதமாக சித்தரித்துக் காட்டி, குட்டையைக் குழப்பிவிட்டு அதிலே அரசியல் மீன்பிடிக்க முயலும் சிறுமைத்தனம் நம் பிரதேசத்துக்கு மிகப் பெரிய ஆபத்தைக் கொண்டு வரும் என்பதை இத்தருணத்தில் நினைவூட்ட விரும்புகிறேன்.

பாரிய மாற்றங்களை வேண்டி நிற்கும் எமது பிரதேச கல்வி அவ்வகையான மாற்றங்களுக்குட் படுத்த நாம் மிகக் கடினமாக உழைத்துக் கொண்டிருக்கும் இத்தருணத்தில் அனைத்துத் தரப்பினரிட மிருந்தும் ஒத்துழைப்பை நாடி நிற்கிறோம். எல்லாத் தரப்பினதும் ஒத்துழைப்புடனேயே நாம் மேற்கொள் ளவுள்ள மாற்றங்கள் தங்கியுள்ளன. அந்த மாற்றங்கள் புத்தளம் சாஹிரா தேசிய பாடசாலை, வெட்டாளை அசன் குத்தூஸ் வித்தியாலயம், மணல்குண்டு அல்-அஸ்ரக் விததியாலயம் ஆகிவற்றில் நாம் மேற்கொள்ளவுள்ள மாற்றங்களும், அதைத் தொடர்ந்து கடையாமோட்டை, கற்பிட்டி, கரைத்தீவு ஆகிய பகுதிகளின் கல்வி அபிவிருத்தி மாற்றங்களும் தங்கியுள்ளன.

கல்வியில் மாற்றத்தை ஏற்படுத்தாத எந்த சமூகமும் வேறெந்தத் துறையிலும் மாற்றங்களை காண முடியாது. தாமாக மாறிக்கொள்ளத எந்த சமூகத்தையும் அல்லாஹ்வும் மாற்றப் போவதில்லை என்பதையும் இத்தருணத்தில் நினைவூட்டி மொட்டவிழ்ந்துள்ள புதிய ஸெய்னப் எனும் புது மலருக்கு எனது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆப்தீன் யஹ்யா
வடமேல் மாகாண சபை.

2008. 01. 31
கடையாமோட்டை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிச் செய்தி



பிஸ்மில்லா ஹிர்ரஹ்மானிர் ரஹீம்.

புதுமைகள் காணுகின்ற ஒரு தளம் புத்தளம். புத்திஜீவிகள் , புரட்சிகர சிந்தனையாளர்கள், மேன்மை பெற்ற அரசியல்வாதிகளை ஈன்ற மண் இது என்பதோடு இன்றும் அந்தப் பணி தொடர்ந்து கொண்டிருக்கிறது.

நம் சான்றோர் கவலை எல்லாம் எமது பிரதேசம் மேலும் கல்வி நிலையில் சிகரத்தை எட்டிவிட வேண்டும் என்பதாகும். ஒவ்வொரு அறிவுஜீவியினதும், ஒவ்வொரு நலன் விரும்பியினதும் சிந்தனையில் இது சவாலாக எழுந்து நிற்கிறது.

புத்தளம் பிரதேசம் ஏனைய பிரதேசங்களின் தலைமை மையமாகக் காணப்படுவதோடு, இதர பிரதேச மாணவர்களின் கல்வியை மேம்படுத்தும் நிலையமாகவும் திகழ்கிறது என்பது யாரும் அறிந்த உண்மை.

பிரதேச மாணவ சமூகங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் சாஹிராக் கல்லூரி, பாத்திமா மகளிர் கல்லூரி, இந்துக் கல்லூரி, சாந்த அன்றூஸ் கல்லூரி, ஆனந்த கல்லூரி போன்ற முன்னணிப் பாடசாலைகளைத் தன்னகத்தே கொண்டிருப்பதும் சமூக ஒற்றுமைக்குச் சான்று தருகின்ற ஒரு புரட்சிகர புதுமைதான்.

சமகாலத் தேவைகளுக்கேற்ப சிந்தனைகள் ,சீர்திருத்தங்கள் ஆக்கப்படுவது அவசியமயானது. அந்த வகையிலே உயர்வு பெற்ற "பாத்திமா" எனும் கலைத்தாய் இன்று "ஸெய்னப்" என்ற சேயை ஈன்றிருக்கிறாள். இது புத்தளம் பிரதேசத்திலே தமிழ் மொழி மூலம் பயிலுகின்ற சிறுமியருக்குக் கிடைத்த அரிய வரமாகும்.

ஒரு அரசியல் பிரமுகன் என்ற வகையிலே உயர்வான இந்தப் பணிக்கு எனது அரிய பங்களிப்பையும் செலுத்தி இருக்கிறேன். இது எனக்கு முழுமையான திருப்தியை அளிக்கிறது. வடமேல் மாகாண முதலமைச்சர் கௌரவ அத்துல விஜேசிங்ஹ அவர்களிடம் இந்த "ஸெய்னப்" கல்வி நிலையத்தை அமைப்பதற்கு அனுமதி பெறுவதில் நானும் பங்களிப்பைச் செய்துள்ளேன்.

கல்விக்கு அளிக்கப்படுகின்ற சேவையே உலகில் உயர்வானது என நான் கருதுகிறேன். ஒரு சமூகம் கல்வியிலே உயர்வு பெறும்போது அப்பிரதேசம் நிச்சயம் நிறைவான அபிவிருத்தியைப் பெறும். இன்று "ஸெய்னப்" என விதைக்கப்படுகின்ற இந்த விதை நாளை விருட்சமாக வளர்ந்து சமூகத்தின் எழுச்சிக்கு வழி செய்யும் என்ற ஆசியோடு நிறைவு செய்கிறேன்.

அல்ஹாஜ். என். டீ. எம். தாஹீர்
வடமேல் மாகாண சபை உறுப்பினர்

திகழி, ஏத்தாளை.
2008. 01. 31

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிச் செய்தி



புத்தளத்தில் ஏற்படப்போகும் கல்விப் புரட்சி ஒன்றைக் கட்டியங் கூறுவதாய் நகரின் பெரிய மகளிர் பாடசாலை ஒன்றைப் பிரித்து இரண்டு பாடசாலைகளாக்கும் இன்றைய நடவடிக்கை அமைந்துள்ளதைக் காண்கிறேன்.

கால்நடை வள பிரதி அமைச்சர் கௌரவ கே. ஏ. பாயிஸு ம், வடமேல் மாகாண சபையின் எனது சக உறுப்பினர் ஆப்தீன் யஹ்யா ஆகியோரும் புத்தளம் நகரிலுள்ள சாகிரா தேசிய பாடசாலை, பாத்திமா முஸ்லிம் மகளிர் கல்லூரி ஆகிய இரண்டையும் பிரித்து நான்கு பாடசாலைகளாக்கும் தீவிர முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். அதில் ஒரு கட்டமா கத்தான் இன்று உதயமாகும் செய்னப் முஸ்லிம் மகளிர் கனிஷ்ட பாடசாலை அமைந் துள்ளது. அந்த நிகழ்வு வடமேல் மாகாண முதலமைச்சர் கௌரவ அத்துல விஜேசிங்ஹ அவர்களால் இன்று அரங்கேற்றப்படுவதன் மூலம் மேலும் சிறப்புப் பெறுகிறது.

கல்வியில் மேம்பாடடைந்த சமூகத்தால் மாத்திரமே சவால்களுக்கு முகங் கொடுக்க முடியும். எனவே வடமேல் மாகாண சபையில் புத்தளத்தை பிரதிநிதித்துவஞ் செய்யும் எனது சக உறுப்பினர்களோடு சேர்ந்து நமது பிரதேசத்து கல்வி மேம்பாட்டை முன்னெ டுக்கவே நானும் அவாவி நிற்கிறேன்.

இன்று திறந்து வைக்கப்படும் செய்னப் முஸ்லிம் மகளீர் கனிஷ்ட பாடசாலை வளம் பெற்றுயர்ந்து இப்பகுதிக்கு யுகம் யுகமாய்க் கல்விப் பணி ஆற்ற வேண்டும் என ஆசீர்வ திக்கிறேன்.

கே. ராதாகிருஷ்னன்
வடமேல் மாகாண சபை உறுப்பினர்

உடப்பு.
2008. 01. 31



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Message



*There was a time when the great Muslim leaders dedicated themselves to see every single soul of the Muslim community, have access to good education that could ensure lifetime prosperity. On account of their steadfast commitments there emerged good schools in many parts of this country.*

*In Puttalam , too, such great people have contributed their shares by donating lands, money and offering moral support in order to witness the people of Puttalam have good schools. This is how we were able to have Puttalam Zahira College which, later, became as Zahira National School.*

*We all are well aware that the two prominent schools Zahira National School and Fathima Muslim Ladies College are over crowded and viable actions have to be taken to ease their burden. It pleases me that Hon. K.A. Baiz, Deputy Minister of Livestock Development and Hon. Abdeen Yahya. Member of Provincial Council, NWP are working on their roadmap to enhance the standard of education in Puttalam.*

*I was very much pleased to be with both of them to meet the Chief Minister of NWP, Hon. Athula Wijesinghe on 23rd January 2008 to have a discussion with him about splitting Puttalam Fathima Muslim Ladies College into two separate school as, "Puttalam Fathima Muslim Ladies College" and "Zainab Muslim Girls' Primary School".*

*May Allah, Almighty showers his blessing upon the new "Zainab Muslim Girl's Primary school.*

*M.N.M. Nazmy. JPUM*
*Chairman,*
*Puttalam Urban Council.*

*Office of the Urban Council,*
*Puttalam. 31st January 2008*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# පණිවිඩය



"සෙzයිනබ්" ඔව්, ෆාතිමා මවගේ තුරුලෙන් තමා නිදහස් ව පා තැබීමට පෙරුම් පිරූ ඒ පැතුමන් මල් ඵල ගන්වන මේ සුභ මොහොතේ මෝහට සුභාශිංෂණ ගෙන එමට මට ලැබු ඉඩ ප්‍රස්ථාව භාග්‍යයක් කොට සළකමි. ඉස්ලාම් දහමේ අතෙප්ත්තම මග පෙන්වන්නෙකු වූ මුහම්මද් නබි තුමාණන් ගේ වැඩිමල් දියණිය වන ෆාතිමා තුමියගේ නමින් මෙතෙක් පැවතී ගෙන ආ පාසලේ, ප්‍රාථමික අංශය පමණක් වෙන්කර එතුමියගේ බාල සොයුරියක් වන "සෙzයිනබ්" තුමිය ගේ නමින් ඇය අද දිනයේ තම ස්වකීය ගමන අරඹයි.

අධික සිසු සංඛ්‍යාවක් පාසලකට අභිමානයක් වුවද එය ම පාසලක සංවර්ධනයේ මිණුම් දණ්ඩක් නොවේ.පාසලක් සංවර්ධනය වීමට නම් ප්‍රමාණාත්මක මෙන්ම ගුණාත්මක අංශයෙන් ද තුලනාත්මකව වර්ධනය විය යුතුය.

පුත්තලම ෆාතිමා බාලිකා විද්‍යාලයේ දැනට 4000කට ආසන්න සිසුන් පිරිසක් මාධ්‍ය තුනෙන්ම අධ්‍යාපනය හදාරන බව නොරහසකි.,මුළු වයඹ පළාතටම ඇති එකම ත්‍රිමාධ්‍ය බාලිකා විදුහල ද මෙයයි. එහෙත් මෙවැනි විශාල භෞතික හා මානව සම්පත් කළමණාකරණය කිරීම අපහසු කාර්‍යයක් මෙන්ම එය පාසලේ ශීඝ්‍ර උන්නතිය ලඝාකරවීම කෙරෙහි ද බලපාන්නකි. එමනිසා කාලීන අවශ්‍යතාවයක් වන පුද්ගල සංවර්ධනයද පෙරදැරි කොටගෙන පාසලේ ද අභිවෘද්ධිය උදෙසා මෙහි ප්‍රාථමික අංශය වෙන් කොට වෙනම විද්‍යාල දෙකක් ලෙස පවත්වා ගෙන යැමට ගෙන ඇති තීරණය බෙහෙවින් අගය කරමි.එමගින් විදුහල්පතිගේ පරිපාලනමය හා කළමණාකරණ කටයුතු මෙන් ම අධීක්ෂණ කාර්‍යය ද පහසු වේ.මෙමගින් විද්‍යාල දෙකෙහිම සංවර්ධනය විධිමත් වන බව නොඅනුමානය.

එමනිසා මෙවැනි කරුණු කෙරෙහි අවධානය යොමු කොට සුදුසු අවස්ථාවෙහි ඒ සඳහා පුරෝගාමීව කටයුතු කළ ප්‍රදේශයේ වියතුන් ගේ ප්‍රයත්නය සාර්ථක වේවායි ප්‍රාර්ථනය කරන අතර එසඳහා ඇප කැප වෙමින් දායක වන සියලුම දෙනාට නැවත වරක් මා ගේ සුභාශිංෂනය ගෙනෙමි.

ස්තුතියි!

මෙයට,
**B.M.A**.ජයසිංහ
වයඹ පළාත් අධ්‍යාපන අධ්‍යක්ෂක
කුරුණෑගල.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# පණිවිඩය



පුත්තලම නගරයේ ඇති පාසැල්වලින් දීප්තිමත් පාසලක් ලෙස පු/ෆාතිමා බාලිකා විද්‍යාලය මුල්තැනක් ලබා ගනී.මෙය වර්තමානයේ සිසුන් 4000ක් පමණ අධ්‍යාපනය හදාරන,මුළු වයඹ පළාතටම ඇති එකම එක ත්‍රිමාධ්‍ය බාලිකා විද්‍යාලයකි. පාසලේ අභිවෘද්ධිය උදෙසා මෙහි ප්‍රාථමික අංශය වෙන් කොට සෙයිනබ් ප්‍රාථමික විද්‍යාලය ලෙසට පවත්වා ගෙන යෑමට ගෙන ඇති තීරණය බෙහෙවින් කාලෝචිත වේ.

අධික ප්‍රමාණයක සිසුන් සිටින විශාල පාසල්වල ප්‍රාථමික අංශය වෙන් කිරීම මගින් සිසු සංඛ්‍යාව සීමා කල හැක. මෙසේ කිරීම මගින් පරිපාලන කටයුතු හා අධීක්ෂණ කාර්යයන් පහසුවන බැවින් පාසලේ අභිවෘද්ධිය වේගවත් වන බව අධ්‍යාපනඥයන් ගේ මතයයි. සිසුන්ගේ අධ්‍යාපන සංවර්ධන කාර්යයෙහි අධ්‍යාපන අවස්ථා වැඩි කිරීම හා අධ්‍යාපනයේ ගුණාත්මක සංවර්ධනය සඳහා මග පෑදීම නව අධ්‍යාපන ප්‍රතිසංස්කරණයන්හි ප්‍රධාන අභිමතාර්ථයන් වේ. මධ්‍යගත පරිපාලනය යටතේ විශාල ප්‍රමාණයේ භෞතික හා මානව සම්පත් කළමනාකරණය කිරීම අපහසු කාර්යයකි. මෙය විදුහල්පතිගේ කාර්යභාරය තව දුරටත් වැඩි කිරීමකි. එම කටයුතු විමධ්‍ය ගත කර සුළු ප්‍රමාණයේ ශිෂ්‍ය සංඛ්‍යාවක අධ්‍යාපන සංවර්ධනය සඳහා කටයුතු කිරීම මගින් සිසුන් ගේ පෞරුෂ වර්ධනය කෙරෙහි වැඩි අවධානයක් යොමු කිරීමට විදුහල්පතිට අවස්ථාවක් ලැබේ. මෙ තුළින් රටට වැඩදායි, ගුණගරුක පුරවැසියන් බිහි කිරීම නම් අධ්‍යාපනයේ ප්‍රධාන අරමුණ කෙරෙහි පහසුවෙන් ලඟා විය හැක.

එම නිසා මෙවැනි මාහැඟි කාර්යයන් සඳහා මුල් වී කටයුතු කරන ප්‍රදේශයේ වියතුන් ගේ ප්‍රයත්නය සාර්ථක වේවායි ප්‍රාර්ථනය කරන අතර තවදුරටත්, ෆාතිම බාලිකා මහා විද්‍යාලය නමින් ක්‍රියාත්මක වන ද්විතීයික අංශයේ අභිවෘද්ධියට ද,ඇප කැප වෙමින් දායක වන සියලුම දෙනාට ම ගේ සුභාශිංෂනය ගෙනෙමි.

ස්තුති!

මෙයට,
R.D.සලමොන්
කලාප අධ්‍යාපන අධ්‍යක්ෂක
පුත්තලම.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிச் செய்தி



புத்தளம் மக்களின் நெடுங்காலக் கனவொன்று இப்போது நனவாகியுள்ளமை மகிழ்ச்சியளிக்கின்றது.

பாடசாலைகளிலுள்ள வகுப்புக்களை அடிப்படையாகக் கொண்டு அப்பாடசாலைகளைக் கல்வியமைச்சு வகைப்படுத்தியுள்ளது. தரம் 1-5 வகுப்புகள் கொண்ட பாடசாலைகள், தரம் 6-13 வகுப்புகள் கொண்ட பாடசாலைகள், தரம் 1-9 வகுப்புகள் கொண்ட பாடசாலைகள், தரம் 1-11 வகுப்புகள் கொண்ட பாடசாலைகள் தரம் 1-13 வகுப்புகள் கொண்ட பாடசாலைகள் என்று இவ்வகைப்படுத்தல் அமைந்துள்ளது.

பெருமளவு மாணவர் தொகை கொண்ட பெரிய பாடசாலைகளிலிருந்து ஆரம்பப் பிரிவு வகுப்புகளை நீக்குவதன் மூலம் மாணவர் தொகையை மட்டுப்படுத்த முடியும். இவ்வாறு செய்வதன் மூலம் நிருவாக நடவடிக்கைகளும் கண்காணிப்புப் பணிகளும் இலகுவாக்கப்படுவதால் பாடசாலைகளின் அபிவிருத்தி துரிதமடைவதாக கல்வியியலாளர்கள் கருத்துக்களை முன்வைத்துள்ளனர்.

இதன் அடிப்படையில் நம் நாட்டிலும் பல பாடசாலைகள் இத்தகைய கட்டமைப்புடன் இயங்கி வருகின்றன. கொழும்பு றோயல் கல்லூரி தொடக்கம் புத்தளம் சென் அன்ரூஸ் மகா வித்தியாலயம் வரை இவ்வாறான பாடசாலைகளின் பட்டியல் நீளும். இப்பாடசாலைகள் தனித்தனியாகவும் சுதந்திரமாகவும் முன்னேற்றம் கண்டுள்ளமை கண்கூடு.

புத்தளம் பாத்திமா மகளிர் கல்லூரியிலும் இவ்வாறான கட்டமைப்பை ஏற்படுத்துவதற்காக வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுமதி பெறப்பட்டு மாதங்கள் பல கடந்து வருடங்களாகி விட்டன. எனினும் அதனை நடைமுறைப்படுத்துவதற்கு அவசியமான அடிப்படை வசதிகளை ஏற்படுத்துவதில் கால தாமதம் ஏற்பட்டு வந்துள்ளது. ஆயினும், அவ்வாறான வசதிகளை ஏற்படுத்திக் கொள்ளும் வரை தற்காலிகமாக பாத்திமா மகளிர் கல்லூரி வளாகத்திலேயே புதிய ஆரம்பப் பாடசாலையை நடத்துவதற்கான அனுமதியை வடமேல் மாகாண கல்வியமைச்சும் மாகாண கல்வித் திணைக்களமும் வழங்கியுள்ளன.

இதன்மூலம் ஸெய்னப் எனும் குழந்தை, பாத்திமாவின் மடியில் வீற்றிருந்து தனது ஆரோக்கியமான வளர்ச்சியைத் தொடங்குகின்றது. கால ஓட்டத்தில் தனக்கென வரித்துக்கொள்ளும் தனியான வளாகத்தில் சுதந்திரமாகவும் திடகாத்திரமாகவும் தன்னை நிலைநிறுத்தி தனது தனித்துவத்தை ஸெய்னப் முழுமையாக வெளிப்படுத்தும் என நாம் எதிர்பார்ப்போம்.

எல்லாம் வல்ல அல்லாஹ்வின் அருளும் பெற்றார், பழைய மாணவர், நலன்விரும்பிகள், ஆசிரியர்கள், அதிகாரிகள், அரசியல் சக்திகள் அனைவரினது ஒத்துழைப்பும் பூரணமாகக் கிடைக்கப் பெற்று ஸெய்னப் வளர்ச்சி பெற அனைவரும் பிரார்த்திப்போம்.


தேசகீர்த்தி, கலாபூஷணம் எம்.ஏ.எம்.எம். ஜவாத் மரைக்கார்
பிரதிக் கல்விப் பணிப்பாளர் - தமிழ்ப் பிரிவு
வலயக் கல்விப் பணிமனை, புத்தளம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிச் செய்தி



கல்வியினால் உருவாக்கப்படும் மனித வளமே, ஒரு சமூகத்தின் பெறுமதிமிகு வளமாகும். இவ்வளத்தின் அறிவு விடியலுக்கு அடித்தளம் ஆரம்பக் கல்விக்கூடமே!

நாட்டின் மக்களுக்குக் கல்வி வழங்குவது தம் தலையாயக் கடமையென கல்வி மறுசீரமைப்புகளை ஏற்படுத்தி செயற்பட்டுக் கொண்டிருக்கும் வேளையிலே, தனது பிரதேசத்திலும் புதிய பல மாற்றங்களைச் செய்து, உலகுக்கு உகந்த, உன்னதமான கற்றோரை உருவாக்கும் திடசங்கற்பத்துடன் கௌரவ அமைச்சர் திரு. கே. ஏ. பாயிஸ் அவர்கள் ஸெயினப் முஸ்லிம் மகளிர் கனிஷ்ட வித்தியாலயத்தை உருவாக்கியமை அவரது மகத்தான செயற்பணியாக நான் கருதுகின்றேன்.

புத்தாண்டிலே, புத்தளம் வடக்குக் கோட்டத்திலே, எனது பிறந்த நாளாகிய தை 31 இலே ஸெயினபும் பிரசவமாகியுள்ளமை என் மனதிலே மட்டற்ற மகிழ்வாகும்.

அதிபர், ஆசிரியர் குழாத்தினர், கற்றுப் பயனடையக் காத்திருக்கும் மாணவச் சிட்டுக்கள், பெற்றோர், நலன்விரும்பிகள் அனைவரும் ஒன்றிணைந்து ஆழமான நோக்கினையுடைய, வினைத்திறன் மிகுந்த, பூசல்களை ஆய்ந்து தீர்க்கும் முரணற்ற முகாமைத்துவமிகு, பார் புகழ் பாடசாலையாக வளரச் செய்வீர்கள் என்ற நம்பிக்கையுடன் வித்தியாலயம் இனி காணும் இதிகாசமெல்லாம் வீறுநடை போட என் வாழ்த்துக்கள் என்றுமே!

ஸெயினப் பிறப்புச் சான்றான இவ்விதழிலே வாழ்த்துச் செய்தியினைப் பதிக்க வாய்ப்புக் கிடைத்தமை யான் பெற்ற பாக்கியமே!

வி. நிர்மலா
கோட்டக் கல்வி பணிப்பாளர்
கோட்டக் கல்வி அலுவலகம்
புத்தளம் வடக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிச் செய்தி



பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்

2008.01.31 இல் ஜனனமாகும் ஸெயினப் முஸ்லிம் மகளிர் கனிஷ்ட பாடசாலையின் நினைவாக வெளிவரும் இம்மலருக்கு ஆசிச் செய்தி வழங்குவதில் நான் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

ஒரு சமுதாயத்தின் மறுமலர்ச்சியும் எழுச்சியும் அதன் கல்விநிலை எழுச்சியிலேயே தங்கியுள்ளது. அந்தவகையில் 2004 ஆம் ஆண்டு இப்பாடசாலை ஆரம்பிப்பதற்கான அனுமதி வழங்கப்பட்ட போதிலும், உயிர்பெற்று ஜனனிக்க முடியாத நிலையில் உறங்கிக்கொண்டிருந்த இந்த ஸெயினப் கால்நடை அபிவிருத்தி பிரதி அமைச்சர் கௌரவ கே.ஏ.பாயிஸ் அவர்களின் பயன்தரும் அதிரடி நடவடிக்கைகளினால் உயிர் கொடுக்கப்பட்டு இன்று ஜனனமாவதைக் கண்டு நான் பெருமகிழ்ச்சியடைகிறேன். இதன் உதயம் உறங்கிக் கிடக்கும் சமுதாயத்தை விழிப்புறச் செய்து, சமுதாய எழுச்சிக்கு வழிவகுக்கும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. பூத்துக் குலுங்கும் புத்தளத்தை காண விளையும் அமைச்சரின் செயற்பாடுகளின் முதற்கட்ட நடவடிக்கையாகவே இதை நான் காண்கிறேன்.

பாத்திமாவின் நிழலாக உருவாகும் இந்த ஸெயினபின் ஆரம்பகால நடவடிக்கைகளுக்கு வித்திட்ட பாத்திமாவின் முன்னாள் அதிபரும் எனது சிநேகிதியுமான காலஞ்சென்ற ஜனாபா பரீனா நசீர் அவர்களையும் இச்சந்தர்ப்பத்தில் நான் நன்றியுடன் நினைவு கூறுகிறேன்.

எங்கள் பிள்ளைகளையும் ஆசிரியர்களையும் தற்காலிகமாக எங்கள் பௌதிக வளங்களையும் கொண்டு உருவாகும் இப்பாடசாலை பல வழிகளிலும் வளர்ச்சியடைந்து, மாறிவரும் உலகின் சவால்களுக்கு முகங்கொடுக்கக் கூடிய, சாதனை வீரர்களையும் கல்விமான்களையும் நாட்டிற்கேற்ற ஒழுக்கமுள்ள நற்பிரஜைகளையும் உருவாக்க அடித்தளமிட வேண்டும். இதற்கு புதிய அதிபரின் உற்சாகத்துடன் கூடிய சிறந்த நிர்வாகமும் ஆசிரியர் குழாத்தின் ஒற்றுமையான சேவை மனப்பாங்கும் துணைபுரியும் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை.

இங்கு காலடி பதிக்கும் பிள்ளைகளின் அறிவும் ஆற்றலும் வளர எல்லாம் வல்ல அல்லாஹ் துணைபுரிவானாக! இம்மாணவர்களின் கல்வி வளம் பெற எனது இதயபூர்வமான வாழ்த்துக்களையும் நல்லாசிகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி சுமையா றிஸ்வான்
அதிபர்
பாத்திமா மகளிர் மகா வித்தியாலயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிச் செய்தி



பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்

புத்தளம் மண்ணின் கல்வி எழுச்சியின் முதல் முயற்சியாக தமிழ் மூல பாலர் பிரிவுக்கென ஸெய்னப் முஸ்லிம் மகளிர் கனிஷ்ட பாடசாலை ஆரம்பிக்கப்படுவதை பெருமகிழ்ச்சியுடன் வரவேற்கின்றேன். இப்பாடசாலையானது எம் சமூகப் பெண்களின் கல்வி, ஒழுக்கம், விழிப்பு, தலைமைப் பண்பு, சமூக சேவை என்பவற்றில் சிறந்த அடித்தளத்தை இட்டு, சன்மார்க்கத்தின் வழி நின்று சமூகத் தொண்டாற்ற வேண்டுமென பிரார்த்திக்கின்றேன்.

மேற்குறிப்பிட்ட இலக்குகளை அடைய உருவாக்கப்பட்டுள்ள இப்பாடசாலையின் அதிபராக கடமையாற்றக் கிடைத்தமை மகிழ்வைத் தருகின்றது. எல்லாம் வல்ல அல்லாஹ்வுக்கே புகழனைத்தும். "அல்ஹம்துலில்லாஹ்". இதனை அல்லாஹ் எனக்களித்த சமூகக் கடமையென கருதுகிறேன்.

பாடசாலையொன்று வளர்ச்சியடைய வேண்டுமாயின் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கம், நலன்விரும்பிகள், அரசியல்வாதிகள் எந்தளவிற்கு நேசிக்கின்றனரோ அந்தளவிற்கு பாடசாலையின் கல்விவிருத்தியும் வளவிருத்தியும் அமையும் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை.

ஸெய்னபின் நல்வளர்ச்சிக்கு வல்ல அல்லாஹ்வின் நல்லருள் கிட்ட அனைவரும் பிரார்த்திக்க வேண்டும். இம்மகளிர் பாலர் பாடசாலை ஆரம்பிக்கப்பட வேண்டுமென ஆசைகொண்டு அதற்கான முயற்சியில் ஈடுபட்டு 09.01.2004 இல் வடமேல் மாகாண கல்வித் திணைக்களத்தின் அங்கீகாரத்தை பெற்றும், பல்வேறு இடையூறுகளால் ஆரம்பிக்கப்படாதிருந்த ஸெய்னபை பாத்திமா வளாகத்தில் தனது விடா முயற்சியின் மூலம் வடமேல் மாகாண முதலமைச்சரதும் வடமேல் மாகாண கல்வித் திணைக்களத்தினதும் அங்கீகாரத்தை 23.01.2008 இல் பெற்று இன்றைய தினத்தில் (31.01.2008) இப்பாடசாலையைத் திறப்பதற்கு நடவடிக்கை எடுத்த புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் கால்நடை வள அபிவிருத்தி பிரதி அமைச்சருமான கௌரவ கே.ஏ. பாயிஸ் மற்றும் வடமேல் மாகாண சபை உறுப்பினர் செ.ஆ. யஹ்யா, நகரபிதா என். நஸ்மி, புத்தளம் மாவட்ட கல்வி அபிவிருத்திக்கான ஆலோசனைக் குழுவினருக்கும் மற்றும் சம்பந்தப்பட்ட அனைவருக்கும் இம்மையிலும் மறுமையிலும் வல்ல ரஹ்மானின் நல்லருள் கிடைப்பதுடன், ஆரம்பக் கல்விக்கு ஒளியூட்டும் இவர்களை அல்லாஹ் பொருந்திக் கொள்வானாக.

"அல்ஹம்துலில்லாஹ்"

பெலஜியா அபுல்ஹுதா
- அதிபர் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிச் செய்தி



பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்

புத்தளம் பாத்திமா மகளிர் கல்லூரியின் ஆரம்பப் பிரிவு மாணவர்களின் கல்வி நலனுக்காக புத்தளம் ஸெயினப் முஸ்லிம் மகளிர் கனிஷ்ட வித்தியாலயம் என்ற பெயரில் தனியான பாடசாலையொன்று ஆரம்பித்து வைக்கும் இந்நன்நாளில் எனது வாழ்த்துச் செய்தியை சமர்ப்பிப்பதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

மாணவர்களின் கல்வி அபிவிருத்தியில் கல்விக்கான வாய்ப்புகளை அதிகரிப்பதும் கல்வியின் பண்புசார் விருத்திக்கு வழி செய்தலும் புதிய கல்விப் புனரமைப்பின் பிரதான பரிந்துரைகளாகும். ஒரே நிர்வாகத்தின் கீழ் பாரிய அளவிலான பௌதிக, மனித வளங்களை முகாமைத்துவம் செய்வது சிரமமான காரியமாகும். இது அதிபரின் வேலைப்பளுவை அதிகரிப்பதாகவே அமையும். அவற்றைப் பரவலாக்கி சிறியளவிலான மாணவர் தொகையின் கல்வி வளர்ச்சிக்காக பணியாற்றுவதன் மூலம் மாணவர்களின் தனியாள் ஆளுமை விருத்தியில் கூடுதலான பங்களிப்புச் செய்ய அதிபருக்கு வாய்ப்பு கிடைக்கும். இது மேல்நாடுகளில் குறிப்பாக அவுஸ்திரேலியாவில் நான் கண்ட அநுபவமாகும்.

இவ்வடிப்படையில் துரிதகதியில் அளவுசார் அபிவிருத்தி, பண்புசார் அபிவிருத்தி ஆகிய இரு துறைகளிலும் அண்மைக்காலம் முதல் பாரிய அபிவிருத்தியடைந்து வரும் பு/பாத்திமா முஸ்லிம் மகளிர் கல்லூரியின் ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்காக புதிதாக பு/ஸெயினப் முஸ்லிம் மகளிர் கனிஷ்ட வித்தியாலயத்தின் ஆரம்பம் ஒரு முக்கிய மைல் கல்லாகும்.

இக்கலாசாலை மேலும் மேலும் வளர்ச்சியடைந்து கூடிய கதியில் சகல வளங்களையும் கொண்ட ஒரு கலாசாலையாக வளர எல்லாம் வல்ல இறைவன் அருள்பாலிப்பானாக. ஆமீன் !

தேசகீர்த்தி அல்ஹாஜ் எம்.எச்.எம்.எம். மஹ்ரூப் மரைக்கார் J.P. (அகில இலங்கை)
முன்னாள் இசுருபாய கல்வியமைச்சின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் நாயகம்
28. 01. 2008


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிச் செய்தி



1962 முதல் ஒரு முஸ்லிம் பெண்கள் பாடசாலையாக இயங்கி வந்த புத்தளம் பாத்திமா முஸ்லிம் மகளிர் கல்லூரி சுமார் 46 ஆண்டுகளின் பின்னர் இரு கூறுகளாகப் பிரிக்கப்பட்டு "பாத்திமா முஸ்லிம் மகளிர் கல்லூரி" எனவும் "செய்யனப் முஸ்லிம் மகளிர் கனிஷ்ட பாடசாலை" எனவும் இருவேறு பாடசாலைகளாக்கப்படும் வரலாற்று முக்கியத்துவமிக்க தினத்தை கண்டுகளிக்கும் வாய்புக் கிடைத்தமை யையிட்டு பெருமகிழ்வடைகிறேன்.

மூவாயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர் தொகையை எமது பாடசாலையிலே கொண்டிருக்கிறோம் என்பது பெருமைக்குரிய விடயமல்ல. அது வேதனைக் குரியது. ஒரு பாடசாலையின் மாணவர் தொகை குறைவாக இருக்கும்போது அப்பாடசாலையை நிருவகிப்பதும், அப்பாடசாலைக்கான அரச நிதி ஒதுக்கீடுகளைத் தனித்தனியாகப் பெற்றுக்கொள்வதும், தனித் தனி அலகுகள் மூலம் மாணவர்களின் கற்றல் நடவடிக்கைகளை மேம்படுத்துவதும் இலகுவாக்கப்படும் என்பது காலம் தாழ்த்தியாவது புத்தளத் தில் உணரப்பட்டுள்து ஓய்வபெற்று கல்வி அதிகாரி என்ற முறையில் எனக்கு மகிழ்வைத் தருகிறது.

இன்று முதல் புத்தளம் நகரின் முஸ்லிம் மாணவியர் முதலாம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்ப வரையில் செய்னப் முஸ்லிம் மகளீர் கனிஷ்ட வித்தியாலயத்திலும், ஆறாம் வகுப்பு முதல் பதின் மூன்றாம் வகுப்ப வரையில் பாத்திமா முஸ்லிம் மகளீர் கல்லூர இலும் கல்வி கற்றத் தொடங்குவர். இந்த நடவடிக்கை புத்தளம் நகரின் கல்வி வரலாற்றில் புதிய மாற்றங்களைக் கொண்டு வருவதோடு இவ்வமைப்பை இதர பாடசாலைகளும் பின்பற்றும் நிலை உருவாகும் என்பது எனது எதிர்பார்ப்பாகும்.

காலத்துக்கேற்ற மாற்றங்களை அனுசரித்து நாமும் மாறிக் கொள்ள வேண்டியிருக்கிறது. காலா காலமாக அனுசரிக்கப்பட்டு வரும் நடைமுறைகளை சடுதியாக மாற்ற முற்படும்போது அச்சங்கள், சந்தேகங்கள், குழப்ப நிலைகள் எற்படுபது பொதுவான ஒன்றுதான். அவற்றைப் பெரிதாக எண்ணி மாற்றங்களை ஏற்படுத்துவதை தாமதம் செய்ய முடியாது. அவ்வாறான தாமதம் ஒரு சமூகத்தை பின்தள்ளிவிடும் என்பதையும் நாம் மனதில் வைத்துக்கொள்ள வேண்டும்.

இன்று தொடங்கி வைக்கப்படும் புதிய பாடசாலை யுகங்கள் பல கண்டு புத்தளம் நகருக்குக் கல்விப் பணி செய்ய வேண்டும் என வாழ்த்துவதோடு எல்லாம் வல்ல அல்லாஹ்விடம் இறைஞ்ச கரம் உயர்த்துகிறேன்.

எம். ஜே. எம். ஜலீல
ஓய்பு பெற்ற கல்வி அதிகாரி

போள்ஸ் வீதி,
புத்தளம்.
2008. 01. 31

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிச் செய்தி

Traditions die hard" என்று சொல்வார்கள். காலா காலமாக மக்கள் செய்துவரும் நடவடிக்கைகளில் சடுதியான மாற்றங்களை அறிமுகம் செய்வது எப்போதுமே சர்ச்சைக்குரிய விடயம்தான். அது போன்றதோர் காரியத்தைத்தான் நாம் இந்த செய்னப் முஸ்லிம் மகளிர் கனிஷ்ட பாடசாலையை புத்தளம் பாத்திமா மகளீர் மகாவித்தியாலய வளாகத்தினுள்ளேயே ஆரம்பிப்பதன் மூலம் பரிசோதித்துப் பார்க்க விளைந்தோம்.

புத்தளம் நகரத்துப் பாடசாலைகள் இரண்டைப் பிரித்து நான்கு பாடசாலைக ளாக்குவதும், காலவோட்டத்தில் கலை, விஞ்ஞானப் பிரிவுகளுக்கெனத் தனித் தனியான பாடசாலைகளை உருவாக்குவதும், அந்நடவடிக்கையின் மூலம் கல்வித் துறையில் புரட்சிகரமான மாற்றங்களை அறிமுகஞ் செய்வதும் புத்தளம் மாவட்ட அபிவிருத்திக்கான ஆலோசனைக் குழுவினது திட்டமாகும்.

கௌரவ கால்நடை வள பிரதி அமைச்சர் கே. ஏ. பாயிஸ், வடமேல் மாகாண சபை உறுப்பினர் ஆப்தீன் யஹ்யா, புத்தளம் நகர பிதா எம். என். எம். நஸ்மி ஆகியோருடன் புத்தளம் மாவட்ட அபிவிருத்திக் கான ஆலோசனைக் குழு உறுப்பினர்கள் வடமேல் மாகாண முதலமைச்சர் கௌரவ அத்துல விஜேசிங்க அவர்களைச் கடந்த 2008. 01. 23 ஆந் தேதி சந்தித்தபோது எமது திட்டத்தை வரவேற்ற முதலமைச்சர் அம்மாதிரியான திட்டங்களையே தாமும் முன்னெடுத்துவருவதாகக் கூறியபோது அது எமக்கு மன தைரி யத்தைத் தந்தது.

ஆனாலும் ஒரு பாடசாலையின் பழுவைக் குறைத்து, வளங்களை வேறு வேறாகப் பெற்று கல்வி முன்னேற்றம் ஒன்றைச் செய்யும் நடவடிக்கையை மேற்கொள்ள முற்பட்டபோது அதற்குத்தான் எத்தனை தடைகள்! எத்தனை முட்டுக்கட்டைகள். அத்தனைக்கும் எதிர் நீச்சல் போட்டுத்தான் இப்புதிய பாடசாலையை நாம் இன்று திறந்து வைக்கிறோம். இதன் வெற்றியில் நாம் அடுத்து மேற்கொள்ள உத்தேசித்துள்ள சாகிரா தேசிய கல்லூரியின் ஆரம்பப் பிரிவை பிரித்து தனியான பாடசாலையாக்கும் முயற்சியின் வெற்றியும் தங்கியுள்ளது.

இவைகள் அனைத்தையும் சாதிப்பது அனைத்துத் தரப்பினரும் கைகோர்த்துச் செயற்படுவதில் தங்கியுள்ளது என்பதை நாம் மறந்துவிடலாகாது. அப்படியொரு கூட்டு நடவடிக்கைக்காக அழைப்பு விடுத்து விடைபெறுகிறோம்.

செய்னப் நீடு நிலைத்து புத்தளத்தில் கல்விச் சேவை செய்ய எமது வாழ்த்துக்கள்.

புத்தளம் மாவட்ட அபிவிருத்திக்கான
ஆலோசனைக் குழு

கால்நடை வள அபிவிருத்தி பிரதி அமைச்சரின் அலுவலகம்.
புத்தளம். 2008. 01. 26



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பாயிஸ் - அதுல உடன்படிக்கை கைச்சாத்திட்டபோது.
வடமேல் மாகாண சபை முதலமைச்சர்
அதுல விஜசிங்ஹ பிரதி அமைச்சர் கே.ஏ. பாயிஸ் வடமேல் மாகாணசபை
உறுப்பினர் எஸ்.ஏ. எஹியா ஆகியோரை படத்தில் காணலாம்.

(படம் ஜே.இஸட்.ஏ. நமாஸ்)





24-01-2008அன்று இடம்பெற்ற முதலமைச்சருடனான சந்திப்பின் பின்னர் ஸெய்னப் பாடசாலை தொடங்கப்படுவது தொடர்பான இறுதி முடிவு எடுக்கப்படுவதற்காக பிரதி அமைச்சர் கே. பாயிஸின் இல்லத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலில் கலந்துகொண்டோர். (படங்கள் பௌமி, ரசீம்)



(படம்: ரசீம்)

**அர்ந்திருப்போர் இடமிருந்து** பி.அ. கே.ஏ. பாயிஸ், திருமதிஏ.எஸ். சம்ஸாத் கேம் லுக்மான் ஸெய்னப் பிரதி அதிபர் திருமதி பெலஜியா அபுல்ஹு தா, திருமதி சுமையா றிஸ்வான், எஸ்.ஏ. எஹியா (மா.உறுப்பினர் (வ.மே.)
**நிற்போர் இடமிருந்து:** எம்.ஜே.எம். இல்ஹாம், என்.எல்.எம். சுஹைர், ஏ.எம். ஹபீல், ஏ.ஓ.எம். றிபாய், இஸட்.ஏ. ஸன்ஹிர், எம்.ஏ.எம்.எம். ஜவாத் மரைக்கார், ஏ.என்.எம். பௌமி, எம்.எஸ்.எம். றபீக் எம்.எஸ். அப்பாஸ். எம்.எச்.எம். [illegible]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







பிரதியமைச்சர் பாத்திமா கல்லூரியின் ஆரம்ப கால மாணவர்களுடன் ஸெய்னப் ஆரம்ப விழா தொடர்பாக கலந்துரையாடுவதை படத்தில் காணலாம். (படங்கள் - ஜே. இஸட். ஏ. நமாஸ்)





ஸெய்னப் பாடசாலை ஆரம்பிக்கப்படவுள்ள பகுதியும் வகுப்பறைகளும்.
(படங்கள் இஸட். ஏ. ஸன்ஹிர்)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



25-01-2008 அன்று ஸெய்னப் பாடசாலை அமையவிருக்கும் இடத்தை பிரதியமைச்சர் கே.ஏ.பாயிஸ், அதிபர் திருமதி பெலஜியா அபுல்ஹு தா, கல்விக் காரியாலய அதிகாரிகள் மற்றும் அபிவிருத்தி சங்க உறுப்பினர்கள் பார்வையிடுவதையும் அதனைத் தொடர்ந்து விழா ஒழுங்குகள் தொடர்பான கலந்துரையாடல் நடைபெற்றதையும் படங்களில் காணலாம். (படங்கள் - றிபாய்)



(படம் - ரசீம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Zainab Muslim Girl's Primary School

Established 2008

Let's Learn In the Name of Allah Who Taught by Pen

ZAINAB

**இலச்சினை - விளக்கம்**

5 பென்சில்களும் குறிப்பது:

01. ஆரம்ப பிரிவு மாணவர்கள் எழுதுவதற்கு பாவிப்பது பென்சில்.
02. இஸ்லாத்தின் ஐந்து கடமைகள்.
03. ஐந்து நேர தொழுகை.
04. பென்சிலின் நிறங்கள்:
    நாட்டின் அனைத்து இனங்களுக்குமான வர்ணங்களைக் குறிக்கின்றது.
05. பென்சில்கள் வைக்கப்பட்டிருக்கும் அமைப்பு:
    உரோமன் இலக்கத்தில் ஐந்தை குறிக்கும் அமைப்பில்.

புத்தகம் குறிப்பது:

01. எழுதுவதற்கான அப்பியாசக் புத்தகம்.
02. வாசிப்பதற்கான புத்தகம்.

புத்தகத்திற்கு கீழே பிறை குறிப்பது:

01. முஸ்லிம் பாடசாலை என்பதை.

ரோஸ் நிறம் குழந்தைகளுக்கான ரோசா பூ நிறத்தைக் குறிக்கின்றது.

இலச்சினையைச் சுற்றி வரும் நிழல் குறிப்பது:
ஸெய்னப் பாத்திமாவின் நிழல் என்பதை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பு/ஸெய்னப் முஸ்லிம் மகளிர் கனிஷ்ட வித்தியாலயம்

# பாடசாலை கீதம்

யாத்தவர்: எம். எஸ். அப்பாஸ்
காலம் : 2008-01-14

அறிவைத் தேடி வந்தோம் - உன்

அருளை நாடி வந்தோம்

நிறைவாய் கற்றுயர

எமக்கருள்வாய் அல்லாஹ்வே!

(அறிவை...)

ஸெய்னப் எனும் எம் அன்னை - அவள்

சேய்களாம் மாணவர் எம்மை (11)

சீராய் வளர்த்தெடுப்பாள் - நாம்

நெராய் வழி நடப்போம் - நாம்

நேராய் வழி நடப்போம்.

(அறிவை.....)

ஞானத்தில் சிறந்து நிற்போம் - உயர்

ஸ்தானத்தில் நிமிர்ந்து நிற்போம் - நாம்

கவனத்தில் மலர்ந்து நிற்போம் - நாம்

சுவனத்தில் மலர்ந்து நிற்போம்.

(அறிவை.....)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பு/ஸெய்னப் முஸ்லிம் மகளிர் கனிஷ்ட வித்தியாலயம்

## முதல் ஆசிரியர் குழாம்

**அதிபர்**
**திருமதி. பெலஜியா அபுல்ஹுதா**

**உப அதிபர்**
**திருமதி. ஏ.எஸ். ஸம்ஸாத் பேகம்**

திருமதி. ஏ.ஆர். ஸஹீதா ரஹீம்

திருமதி. ஏ.ஆர். லனீஸா

திருமதி. என்.ஏ. ஸமத்

திருமதி. எம்.யூ.எஸ். கமரியா

திருமதி. எஸ்.எஸ். மஜ்னூனா

திருமதி. பீ. சியாத்

திருமதி. யூ. ஜனூஸ்

திருமதி. எம்.பீ. எப். றொஸ்மின்

திருமதி. டீ.என்.எம். சுல்பா

திருமதி. யூ.எஸ்.யூ. ஹம்தியாஸ்

திருமதி. எஸ்.ஜே.எம். ஹில்மி

திருமதி. எல். பௌரியா உம்மா

திருமதி. எஸ். அன்ஸார்

திருமதி. எஸ்.ஜே.ஏ. ஜப்பார்

திருமதி. ஏ.ஜே. அஸுர் பீவி

திருமதி. ஏ.ஓ.எஸ். நஸுஹா

திருமதி. ஏ.ஆர். மர்ஜுன் றஹீம்

திருமதி. எஸ்.ஏ.எஸ். ஸியாதா

திருமதி. பீ. ஜெயந்தன்

திருமதி. யூ.எல்.எம். ஹன்பல்

திருமதி. எஸ்.எப். ரௌபியா

திருமதி. ஏ.எம்.ஐ. ஸிபாயா

திருமதி. எம்.ஆர். ஸாஹிபா

திருமதி. ஏ.எச். ஆயிஷா பீவி

திருமதி. ஏ.எஸ்.இஸட். முனவ்வரா

திருமதி. கே. சுமந்திரன்

திருமதி. எப்.எம்.ஏ. மஜீத்

திருமதி. எஸ்.எம்.யூ. குர்ரதுல் ஐன்

செல்வி. டீ.ஜீ. தமயந்தி

திருமதி. ஏ.ஆர். முஸ்பிரா

திரு. என்.எம்.கே. பண்டார

செல்வி. எம்.ஏ.சீ. ஷாந்தி

செல்வி. எம்.ஐ.எஸ். நிபாயா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸெய்னப் வரலாறு

காட்டரசி குவேனியும், பாரத இளவரசன் விஜயனுக்குமிடையில் வடமேற்கு இலங்கையின் கானகம் தம்பபண்ணியில் நடந்த பலாத்காரத் திருமணத்திலிருந்து தொடங்குகிறது இலங்கை வரலாற்றின் முதல் அத்தியாயம். அந்த தம்பபண்ணி புத்தளத்தில் அமையப் பெற்றதால் அதையே நெடிய புத்தளம் வரலாற்றின் முதற்பக்கமாவும் கொள்ளலாம். அதிலிருந்த புரட்டப்பட்ட பக்கங்கள் எத்தனையோ, அவற்றில் பதியப்பட்ட வரலாற்றுத் தடயங்கள் எத்தனையோ. அவைகள் சில வரலாற்று மாணவர்களாலும், சமூகவியலாளர்களாலும் படிக்கப்பட்டிருந்தாலும் பலரால் அது தொட்டுக்கூடப் பார்க்கப்படவில்லை என்பதும், தற்செயலாகப் பார்வை பட்டபோதும் மேலெழுந்தவாரியாகப் படித்துவிட்டு மறக்கப்பட்டதென்பதும் வாஸ்தவங்கள். இத்தனைக்கும் மத்தியில்தான் அந்த நெடிய வரலாற்றின் மற்றுமொரு அத்தியாயம் புரட்டப்படுகிறது.

இப்புதிய அத்தியாயம் கிழக்கில் பிறந்த அஷ்ரப் எனும் அரசியற் தலைவனால் 1980 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேசிய அமைப்பாளர் கே.ஏ. பாயிஸ்"ம், 1951 ஆம் ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சிக்கு விடைகொடுத்த அமரர் பண்டாரநாயக்க கம்பளை சாஹிராவின் தந்தை மாமனிதர் கலாநிதி பதியுத்தீன் மஹ்மூதுடன் சேர்ந்து கலாநிதி பதியுத்தின் மஹ்மூதின் கம்பளை இல்லத்தில் வைத்து உருவாக்கிய ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சியின் கட்டுப்பாட்டிலிருந்த வடமேல் மகாண சபையின் முதலமைச்சர் அத்துல விஜேசிங்ஹவும், வடமேற்குத் தலைநகர் குருணாகலில் 2006 செய்து கொண்ட "அத்துல - அப்துல் பாயிஸ் உடன்படிக்கை" எனும் அரசியற் திருமணத்தின் மூலம் கருக்கட்டி, புத்தளம் கல்வி வலையத்தில் 60 தமிழ் மொழிப் பாடசாலையாக 2008.01.31 ஆந் தேதி ஜனனமான "ஸெய்னப் முஸ்லிம் மகளிர் கனிஷ்ட பாடசாலை"யோடு ஆரம்பமாகிறது.

உருண்டோடிவிட்ட இரண்டு ஆயிரத்தாண்டுகளின் ஒரு அற்புதம்தான் ஆண்-பெண் தொடர்பு நியதிகளுக்கு அப்பால் நிகழ்ந்த நபி ஈஸா ( அலைஹிஸ்ஸலாத்து வஸ்ஸலாம் ) அவர்களின் ஜனனம். அந்த அற்புதம் போலொரு அற்புதமாய் ஸெய்னபின் ஜனனத்தைப் பார்க்கிறேன். 1920களில் பிறந்த "கால ஸ்கூல்" என்று அழைக்கப்பட்டு வந்த புத்தளம் அரசினர் ஆண்கள் பாடசாலையை கலாநிதி பதியுத்தீன் மஹ்மூத் அவர்கள் இந்நாட்டின் கல்வி அமைச்சராக இருந்தபோது ஆணைப் பெண்ணாக்குவது போல ஒரு பெண் பாடசாலையாக மாற்றியமைத்து "பாத்திமா மகளிர் மகா வித்தியாலயம்" என்றும் பெயரிட்டு வைத்தார். ஓர் ஆண் ஒரு பெண்ணானது. 1962 ல் பிறந்த பாத்திமா 47 வயதை அடைந்தபோது அந்தப் பெண்ணுக்குள் மறைந்திருந்த " செய்னப்" எனும் இன்னுமொரு சின்னப் பெண்ணை இனங்கண்டு, அரசியல் அறுவைச் சிகிச்சை செய்து பிரித்தெடுத்து "பாத்திமா" எனவும் " ஸெய்னப்" எனவும் இரண்டு பெண்களாக்கிச் சமூகத்தின் முன் நிற்க வைக்கும் அற்புதம். இது இந்த ஆயிரத்தாண்டின் முதற் தசாப் தத்தில் 31.01.2008 இல் நிகழ்கிறது.

1990 ல் வடக்கிலிருந்து வேரறுக்கப்பட்டு புத்தளம் நோக்கிப் புலம் பெயர்ந்த ஆயிரக்கணக்கான முஸ்லிம் மக்களின் பெருஞ் சுமையைப் புத்தளம் தன் தோளில் சுமக்கத்தொடங்கிய நாள் தொட்டு பாத்திமா முஸ்லிம் மகளிர் கல்லூரியும் பெரும் பளுவொன்றைத் தன் தோளில் சுமக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டது. ஆயினும் மூவாயிரத்தைத் தாண்டிவிட்ட மாணவர் தொகையை அடிப்படை வசதிகள் அவ்வளவாக இன்றி, தனியான ஆரம்பப் பிரிவும் இன்றி நடாத்திச் செல்வதன் சிரமம் இரு தசாப்தங்கள் வரையில் உணரப்படாதிருந்தது புத்தளம் கல்வி வரலாற்றில் விரும்பத் தகாத பக்கங்கள்தான்.

காயம் ஏற்படும் காரணத்தைக் கண்டறிந்து அதைத் தடுக்க வகை செய்யாது காயத்துக்கு மருந்து கட்டிக் கொண்டிருப்பவர்கள் போல புதியதொரு பாடசாலையை உருவாக்க வேண்டும் என்ற எண்ணமே இல்லாது தேவைப்படும்போதெல்லாம் கட்டிடங்களை மாத்திரம் யாரிடமாவது இருந்து பெற்றுக்கொண்டு காலத்தைக் கடத்தும் நிலைதான் இங்கிருந்தது. இது எதிர்காலத்தில் சாத்தியமாகாது எனவே ஒரு புதிய பாடசாலை உருவாக்கப்பட வேண்டும் என்ற எண்ணம் முளைவிட்டது. அப்படி ஒரு எண்ணம் இம்மண்ணின், இதே பாத்திமா உருவாக்கிய, கடல் கடந்துபோய் அவுஸ்திரேலியாவில் கல்விகற்றுத் திரும்பிய முதல் புத்தளத்து மகளாகிய சகோதரி நஸ்லிய்யா காதரின் இதயத்தில்தான் கருக்கட்டியது. 2003ல் சகோதரி நஸ்லிய்யாவும் , மூத்த ஆசிரியர் எம்.ஐ.எல்.இஸட். ஆப்தீன் அவர்களின் புதல்வர் சகோதரர் இஸட்.ஏ. ரஸ்மியும் நானும் பாத்திமாவின் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தில் அங்கம் வகித்துக் கொண்டிருந்த நாட்களது. 1995ற்கு புதிய மாணவர்களைச் சேர்த்துக் கொள்ளும்போது தேவைப்படும் இடவசதிக்கு என்ன செய்வது என்று நாங்கள் கவலைப்பட்டுக் கொண்டிருந்த நாட்களது.

சகோதரி நஸ்லியாவின் ஆலோசனையின் பேரில் 1994 இல் நகரிலுள்ள படித்தவர்களை ஒன்று திரட்டி இந்த விடயம் பற்றிக் கலந்தாலோசிக்க நாம் திட்டமிட்டோம். அதற்கான ஏற்பாடுகளை அவசர அவசரமாகச் செய்தோம். பாடசாலை அபிவிருத்தி சபை நிதியிலிருந்து ரூபா 5,000.00 அதற்காகச் செல விடப்பட்டது. ஆனால் அன்று, கூட்டத்தின் இடைநடுவே, பரிமாறப்பட்ட சிற்றுண்டிகள்தான் சமூகளித்திருந் தவர்களின் வயிறுகளுக்குள் சமிபாடடைந்தனவேயன்றி இன்னுமொரு பாடசாலையை உருவாக்க வேண் டும் என்ற கருத்தை யாருமே சீரணித்துக் கொள்ளவில்லை. ஆயினும் அதை முன்னெடுக்கும் எண்ணம் எம் மூவரின் மனங்களை விட்டும் அகன்றுவிடவில்லை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம் எண்ணக் கருவறையில் கருக்கட்டிய "மாற்றுப் பாடசாலை" திட்டத்தை மன்னார் வீதியில், புத்தளம் உப்பு சங்கத்தின் அருகாமையில் இருந்த காணியில் உருவாக்கத் துடித்தார் சகோதரி நஸ்லிய்யா. அது முன்பு உப்புக் கூட்டுத்தாபனத்தின் கட்டுப்பாட்டில் இருந் நிலம். புத்தளம் உப்புச் செய்கையை உப்புக்கூட்டுத்தாபனத்தின் கட்டுப்பாட்டிலிருந்து புத்தளம் உப்பு உற்பத்தியாளர் சங்கத்தின் கைக்கு மாறியதைத் தொடர்ந்து அந்த நிலம் கவனிப்பாரற்றுக் கிடந்தது.

பொது நிலங்கள் அடையாளப்படுத்தப்பட்டு அவற்றை ஒரு கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க அரசிடம் முறையான திட்டம் ஒன்று இல்லாததால் வலிமை உள்ளவர்கள் அவற்றைத் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவது புத்தளத்தைப் பொறுத்தவரை ஒரு சர்வ சாதாரண விடயம். பாடசாலைகளுக்கு தம் சொந்த நிலங்களை வாரி வழங்கிய வள்ளல்கள் மறைந்த பின்னர் பாடசாலைகளின் நிலங்களைக் கூட தம் நிலங்கள் என்று வாதாடி பறித்தெடுக்கும் கயமைக் குணம் கொண்டவர்களால் புத்தளம் ஸாஹிராக் கல்லூரி, வெட்டாளை அசன் குத்தூஸ் போன்ற பாடசாலைகள் வெகுவாகப் பாதிக்கப்பட்டுக்கொண்டிருந்த காலத்தில்தான் உப்புக் கூட்டுத்தாபனத்தினால் கைவிடப்பட்ட நிலத்தில் மாற்றுப் பாடசாலை ஒன்றை அமைக்க சகோதரி நஸ்லிய்யா துடித்தார்.

ஆனால் காணியைத் தமதாக்கிக் கொண்ட ஒருவரால் சகோதரி நஸ்லிய்யாவின் உயிருக்கு ஆபத்து ஏற்படும் நிலைகூட ஏற்பட்டது. "அந்த எண்ணத்தை கைவிட்டு விடுங்கள்" என்றுதான் அப்போது என்னால் சகோதரி நஸ்லிய்யாவுக்குச் சொல்ல முடிந்து. இவையெல்லாம் நடக்கும் நாட்களில் சகோதரி நஸ்லிய்யா புத்தளம் உப்பு சங்கத்தின் முகாமையாளராக இருக்க, சகோதரர் ரஸ்மி தனது சொந்த பதிப்பித்தல் நிறுவனமான "க்ளோப் லிங்க்" நிறுவனத்தை பல சிரமங்களுக்கு மத்தியில் நடாத்திக் கொண்டு பொதுச் சேவைகளிலும் ஈடுபட்டுக்கெண்டிருக்க நான் புத்தளம் நகர சபையில் கடமையாற்றிக் கொண்டிருந்தேன். நகர சபை கூட்டங்களுக்கு நிகழ்ச்சி நிரல் தயாரிப்பது எனது கடமைகளில் ஒன்றாக இருந்தது.

இந்த நாட்களில் தான் சமுர்த்தி முகாமையாளராகக் கடமையாற்றிய சகோதரர் முஹ்சி புத்தளம் நகர சபைக்கு எழுதிய 2003.12.23 தேதியிடப்பட்ட கடிதம் ஒன்றைப் புத்தளம் நகர சபைக்கு அனுப்பி வைக்க அது நிகழ்ச்சி நிரலில் சேர்த்துக் கொள்ளப்படுவதற்காக தலைவரின் கையொப்பத்துடன் எனது மேசைக்கு வந்திருந்து. அப்போது சகோதரர் குயின்டீன் ஜோசப் நகர சபையின் பதிற்கடமைத் தலைவராக இருந்தார்.

புத்தளம் சவீவபுர வீடமைப்புத் திட்டத்தின் பின்புறமாக, மலேரியா கால்வாய் ஓரமாக அமைந்திருந்த முக்கோண வடிவான காணியை பாடசாலை ஒன்றை அமைப்பதற்காக ஒதுக்கித் தருமாறு அதில் கோரப்பட்டிருந்து. அதுவரையில் மனதில் நீறுபூத்துக் கிடந்த "மற்றப் பாடசாலை" திட்டம் சுவாலை விடத் தொடங்கியது. அவ்விடயத்தை 2004 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்துக்கான நகர சபைக் கூட்ட நிகழ்வுப் பத்திரத்தில் சேர்த்துவிட்டு சகோதரர் முஹ்ஸியையும், சகோதரர் ரஸ்மியையும் கலந்தாலோசித்துவிட்டு காரியத்தில் சற்று ஆழமாக இறங்கத் தீர்மானித்தோம்.

2004.01.12 ஆந் தேதி நடைபெறவிருந்த நகர சபை மாதாந்த கூட்டத்தின்போது சகோதரர் எஸ்.ஆர்.எம். முஹ்ஸி யின் கடிதத்துக்கு ஆதரவு தருமாறு அப்போது நகர சபை உறுப்பினராக இருந்த சகோதரர் ஏ.என்.எம். ஜவ்பர் மரிக்கார் அவர்களையும், சகோதரர் வை.எம். நிஸ்தாத் அவர்களையும் கேட்டுக் கொண்டாலும் அந்த கூட்டத்துக்கு அந்த இருவருமே சமூகமளித்திருக்கவில்லை. கூட்டத்தின் நிகழ்வுப் பத்திர விடயம் "கடிதங்கள், மனுக்கள், முறையீடுகள்" என்ற மூன்றாவது அம்சத்தை அடைந்தபோது அந்தக் கடிதம் சபையில் வாசிக்கப்பட்டது. முதல் எதிர்ப்பு நகர சபை உறுப்பினர் எம். ஜக்ரொப் மொகிதீன் அவர்களிடமிருந்து எழுந்தது.

நகர சபையின் அவைக் கூட்டத்தில் செயலாளருக்கும் எனக்கும் ஒரு தனி இடம் இருக்கும். அதிலே அமர்ந்து கூட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்க நாம் உதவவேண்டும். ஆனாலும் கேட்கப்படும் கேள்விகளுக்கு பதிலளிப்பதைத் தவிர எம்மால் கூட்ட நடவடிக்கைகளின்போது வாய் திறக்க முடியாது. அப்போது சகோதரர் ஏ.கே.எஸ். இப்றாஹீம் நகர சபையின் செயலாளராக இருந்தார்.

"இப்படி கண்ட கண்டவர்களின் கோரிக்கைகளை ஏற்று சபைக் காணிகளை வழங்க முடியாது" என உறுப்பினர் சக்ரொப் மொகிதீன் அவர்கள் ஆட்சேபனை தெரிவித்தபோது எனக்குப் பெரும் அதிர்ச்சி ஏற்பட்டது. சற்று யோசித்துவிட்டு நான் எழுந்து அந்த சபையில் எனது வேண்டுகோள் ஒன்றை முன்வைக்க ஐந்து நிமிடங்கள் ஒதுக்க முடியுமா எனக் கேட்டதும். " நீங்கள் இந்த விடயத்தில் சம்பந்தப்பட்டவரா?" என தலைவரால் வினவப்பட்டது. நேரடியாகவே சம்பந்தப்பட்டவன் என்று நான் சொன்னபோது அப்படியானால் 15 நிமிடமாவது எடுத்தாலும் பரவாயில்லை நீங்கள் உங்கள் கருத்தைச் சொல்லலாம் என்று எனக்குத் தெரிவிக்கப்பட்டது. "Take your own time Abbas" என்று உறுப்பினர் ஜக்ரொப் மொகிதீன் சொன்னது இன்னும் என் காதுகளிலே ஒலிப்பது போலொரு பிரமை.

இன்னுமொரு பாடசாலையை உருவாக்க வேண்டிய அவசியத்தையும், அதற்கான காணித் துண்டொன்றின் தேவையையும் சபைக்கு விளங்கப்படுத்த எனக்கு ஐந்து நிமிடங்களுக்கு மேலாகத் தேவைப்படவில்லை. எனது விளக்கத்தை நான் முடித்துக் கொண்டதும் சபை ஏகமனதாக அந்த வேண்டுகோளை ஏற்றுக் கொண்டது. அப்போது என் கண்முன்னே ஒரு கம்பீரமான பாடசாலையே எழுந்து நிற்பது போலொரு உணர்வு ஏற்பட்டது. ஆனால் அது பாடசாலை அல்ல எமது முயற்சிகளுக்கு தடையாக நிற்கும் பெரும் மலை என்பதை நான் அப்போது உணர்ந்திருக்கவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நகர சபை அதற்கான கடிதத்தை 2004.01.13 ஆந் தேதி வழங்கியதைத் தொடர்ந்து புதிய பாடசாலை ஒன்றை உருவாக்க அனுமதி தருமாறு கோரும் வெறும் கடிதத்தை மாத்திரமே நாம் மாகாண முதலமைச்சருக்கு எழுதினோம். அந்த விடயத்தில் மேற்கொள்ள வேண்டிய கல்வித் திணைக்கள விதி முறைகளை நாம் அறிந்திருக்கவில்லை. அக்கடிதத்தை அப்போது மாகாண சுகாதார அமைச்சராக இருந்த அல்ஹாஜ் எம்.எச்.எம். நவவியிடம் சகோதரர் முஹ்சியும், சகோதரர் ரஸ்மியும் நானும் எடுத்துச் சென்றோம். அதை அப்போது மாகாண பிரதிக் கல்விப் பணிப்பாளராக இருந்த மஹ்ரூப் மரிக்கார் அவர்களிடம் கொடுத்து அவரது விதப்புரையைப் பெற்று வருமாறு அமைச்சர் நவவி அவர்கள் தெரிவிக்க நாமும் அவரைப் போய்ச் சந்தித்தோம். "**රයේ නිර්දේශ කරමි**" என அவர் அதில் எழுதிக் கொடுக்க நாம் அமைச்சர் நவவி அவர்களிடம் கொண்டு சென்றோம். அது பிழையான நடவடிக்கை என மாகாண முதலமைச்சரால் நிராகரிக்கப்பட்டது. "கல்வித் திணைக்களத்தில் முறையான நடவடிக்கைகள் இருக்கிறன அவற்றை சரியான முறையில் பின்பற்றி செய்யுங்கள்" என முதலமைச்சரால் எமக்கு அறிவிக்கப்பட்டது .

அடுத்து என்ன செய்வது என்று தெரியாது விழித்துக் கொண்டிருக்கும் நிலையில்தான் உதவிக் கல்விப் பணிப்பாளர் சகோதரர் ஆர்.எஸ்.ஈ. புஸ்பராஜன் அவர்களின் உதவியைக் கோரலாம் என்ற நினைவு வந்தது. அவரிடம் போய் நிலைமையை விளக்க ஒரு புதிய பாடசாலை ஒன்றை உருவாக்க உதவுங்கள் என்று கேட்டுக்கொண்டேன். அதற்கு இணங்கி உதவி செய்ய முன்வந்த சகோதர் புஸ்பராஜன் அவர்களுக்கு உரிய ஆவணங்களைத் தயாரித்தெடுக்க சுமார் மூன்று மாதங்களுக்கு மேல் தேவைப்பட்டன. அவற்றைத் தயாரித்து வடமேல் மாகாண கல்வித் திணைக்களத்துக்கு அனுப்பி வைத்துவிட்டு " எனது கடமைகள் முடிந்துவிட்டன. இனி உங்களுடைய பணிகளை அரசியல் அதிகாரத்தின் மூலம்தான் செய்ய வேண்டும். இல்லாவிட்டால் அது வடமேல் மாகாண கல்வித் திணைக்களத்தில் கிடந்து தூங்கும்" என அவர் எமக்குத் தெரிவித்தார்.

இதற்குள் பலமுறை நாம் அமைச்சர் நவவி அவர்களைச் சந்தித்துவிட்டோம். ஒவ்வொரு முறையும் அவர் எமக்குச் சொன்ன பதில் "பயப்பட வேண்டாம். நான் செய்து தருவேன்" என்பது. நாட்கள் ஓடி மாகாண சபை கலைக்கப்படும் நாளும் நெருங்கிவிட்டது. கடைசியாக சகோதரர் முஹ்ஸியும் ,ரஸ்மியம் நானுமாக அமைச்சர் எம்.எச்.எம். நவவி அவர்களை புத்தளம் கச்சேரி வீதியில் அமைந்துள்ள அவரது அலுவலகத்தில் சந்தித்தபோது அவர் மூடப்படவுள்ள அலுவலகத்தில் பைல்களை ஒவ்வொன்றாக பார்த்துப் பார்த்து அடுக்கிக் கொண்டிருந்தார். அவருக்கு முன்னால் உள்ள சோபாவில் அமர்ந்து செய்வதறியாது நாம் பார்த்துக் கொண்டிருந்தோம். இடைக்கிடையே அவர் எம்மைப் பார்த்து " ஒன்றுக்கும் பயப்படாதீர்கள், சபை கலைந்தாலும் கவர்னர் என்னுடைய ஆள். நான் அதைச் செய்து தருவேன்" என்று சொல்லிக்கொண்டிருந்தார். சிறிது நேரம் அங்கிருந்துவிட்டு நாம் பெரு மூச்சுடன் வெளியே வந்தோம். வானுயர வளர்ந்த ஒரு கோட்டை ஒரு கனத்தில் சரிந்து என் கால்களின் கீழ் சிதறும் காட்சி என் மனக்கண்ணில் தென்பட்டது.

இதற்குள் இன்னுமொரு மாகாண சபைத் தேர்தல் வந்து அதிலே சகோதர்களாக எஸ்.ஏ. யஹ்யா, எஸ்.எச்.எம். நியாஸ், என்.டீ.எம். தாகீர் ஆகியோர் வடமேல் மாகாண சபை உறுப்பினரானார்கள். இவர்களில் எவருடனும் எனக்கு நெருக் கமான உறவு இருக்கவில்லை. சகோதரர் தாகீர் அவர்களை எனக்கு எப்படியும் தெரியாது. அவரிடம் உதவி கோருவது என்று தீர்மானித்து தொலைபேசியில் அவருடன் தொடர்புகொண்டு நான் யார் என்பதை கற்பிட்டி அல்-அக்ஸாவில் ஆசிரியையாக இருந்த எனது சகோதரியின் பெயரைச் சொல்லி அறிமுகம் செய்து கொண்டு அவரது உதவியை நாடினேன். இப்போது நான் உள்ளூராட்சிச் சேவையில் இருந்து ஓய்வு பெற்று அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமாவின் கொழும்பு தலைமை அலுவலகத்தில் ஊடக அலவலராக சேவை செய்து கொண்டிருந்திருந்தேன்.

குருணாகலுக்கு வந்து தன்னைச் சந்திக்குமாறு சகோதரர் தாகீர் அவர்கள் கேட்டுக் கொண்டார். புத்தளத்திலிருந்து சகோதரர் ரஸ்மி அவர்களை குருணாகலுக்கு வரச் சொல்லிவிட்டு நான் கொழும்பிலிருந்து அங்கு போயிருந்தேன். நண்பகல் 2.00 மணி வரையில் நாம் சகோதரர் தாகீரின் வருகைக்காக காத்திருக்க வேண்டி எற்பட்டது. இறுதியாக அங்கு வந்து சேர்ந்த அவர் எம்மை அழைத்துக்கொண்டு முதலமைச்சரிடம் செற்னறபோது மணி மூன்றாகிவிட்டது. எனக்கு ஒருநாள் வேலை பழுதானது, சகோதரர் ரஸ்மிக்கோ ஒரு நாள் வருமானமே பழுதானது. பசி வயிற்றைப் பிய்த்தெடுத்தது. அந்தப் பட்டினியும், சிறிதளவு பணச் செலவும் எமக்கு பெரிதாகத் தெரியவே இல்லை.

அப்போதுதான் ஒரு கூட்டத்தை முடித்துக்கொண்டு தனது அறைக்குத் திரும்பி அவசர அவசரமாக இன்னமொரு கூட்டத்துக்குப் போக முன் பகல் சாப்பாட்டை அருந்தும் எண்ணத்துடன் வந்த முதலமைச்சர் அத்துல் விஜேசிங்க அவர்களுக்கு எம்மை பார்த்ததும் எரிச்சல் எரிச்சலாக வந்துவிட்டது. எனக்கு மூச்சு விட அவகாசம் தரமாட்டீர்களா? தயவு செய்து புதன் கிழமை வாருங்கள் என்று சகோதரர் தாகீர் மீது சீறிப் பாய்ந்தார் முதலமைச்சர். ஆனாலும் சகோதரர் தாகீர் ஒரு அங்குலம் கூட நகரவில்லை. எமது கடிதத்தை நீட்டிப் பிடித்தவாறு பொறுமையுடன் நின்றார்.

வேண்டா வெறுப்புடன் அந்தக் கடிதத்தைப் பறித்தெடுத்து கல்விக் குழுச் செயலாளருக்கு குறிப்பெழுதி கையெழுத்திட்டு "இதை அங்கு போய் கொடுங்கள்" என முகத்தில் வீதி எறிந்தார். உடனேயே எம்மையும் அழைத்துக்கொண்டுபோய் கல்விக் குழுச் செயலாளரிடம் அதை ஒப்படைத்துவிட்டு எம்மையும் தமது வாகனத்தில் ஏற்றிச் சென்று பஸ் நிலையம் வரை வந்து விடைகொடுத்தார் சகோதரர் தாகீர். நான் கொழும்பு நோக்கிப் புறப்பட்டேன், சகோதரர் ரஸ்மி புத்தளம் நோக்கிச் சென்றார். எனது மனம் வெறுமையாக இருந்தது. சகோதரர் ரஸ்மிக்கு எப்படியிருந்ததோ தெரியாது.

அந்தக் கட்டத்தோடு அடுத்த நடவடிக்கையும் முடிந்துவிட்டது. புதிய பாடசாலையை உருவாக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வது யாருக்குமே பிடிக்காத காரியமாகத்தான் இருந்தது. இந்த நிலையில்தான் சகோதரர் முஹ்ஸியுடனும், சகோதரர் ரஸ்மியுடனும் ஒரு மாலை நேரத்தில் கடையாமோட்டைக்குச் சென்று மாகாண சபை உறுப்பினர் சகோதரர் யஹ்யா அவர்களின் உதவியை நாடினோம். மூவருமாக சேர்ந்து 600 ரூபாய்களை முச்சக்கர வண்டிக்குக் கொடுத்தோம். சகோதரர் யஹ்யா அந்த விடயத்தில் பெரிதும் ஆர்வம் காட்டினாலும் அது இலகுவில் சாத்தியப்படாத ஒன்றாகவே இருந்தது.

'புதிய பாடசாலை ஒன்று உருவாகும்' என்ற எண்ணம் படிப்படியாக எம் மனதில் தளர்வடையத் தொடங்கியது. பக்கம் பக்கமாகப் பத்திரிகைகளில் இவர்களையெல்லாம் திட்டித் தீர்ப்பதை விட எனக்கு வேறு வழியிருக்கவில்லை. ஆனால் பலராலும் கடுமையாக விமர்சிக்கப்பட்டேன். எனது கையாலாகாத நிலையில் அதைத்தான் செய்து கொண்டிருந்தேன். "கருவில் கரைந்து போனாளா ஸெய்னப்" என்று காரசாரமான கட்டுரையை எழுதினேன். அதை தனது புத்தெழில் பத்திரிகையில் பிரசுரிக்க சகோதரர் நமாஸ் முன்வந்தார். இரண்டொரு கட்டுரைகளை "எங்கள் தேசம்" பத்திரிகையில் எழுதினேன். எனது கட்டுரைகள் படிக்கப்படும் போதெல்லாம் "அளவுக்கு அதிகமாகவே தாக்குகிறீர்கள்" என்றுதான் எல்லோரும் சொன்னார்களே அன்றி எனது பிரச்சினை என்னவென யாரும் கேட்டு உதவ முன்வரவில்லை.

2005 ஆம் ஆண்டு முடிவடையும் தருணமும் வந்துவிட்டது. இப்போதுதான் ஸெய்னபைப் பணயம் வைத்து அரசியல் சதுரங்கத்தில் காய் நகர்த்தும் சந்தர்ப்பம் சகோததர் யஹ்யாவுக்குக் கிடைத்து.

வடமேல் மாகாண சபையின் முக்கிய தீர்மானங்கள் சிலவற்றிற்கு மாகாண ஆளுனரின் அங்கீகாரம் தேவை, ஆளுனருக்கோ ஆடம்பர வாகனம் ஒன்று தேவை. இந்த இரண்டும் ஒன்றில் ஒன்று தங்கயிருக்க மாகாண முதலமைச்சருக்கு மக்கள் ஐக்கிய முன்னணியின் ஒத்துழைப்பு தேவை. அது சாத்தியப்படாது போன நிலையில் முதலமைச்சர் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஒத்துழைப்பை நாட வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்ட போதுதான் ஸெய்னபை பணயம் வைத்து சகோதரர் யஹ்யா சாணக்கியத்துடன் அந்த பகடை நகர்த்தலைச் செய்து ஸெய்னபுக்கான அங்கீகாரத்தைப் பெற்றுக்கொண்டார். அதுவரையில் மனக்கொதிப்புடன் இருந்த எனக்கு சகோதரர் முஹ்ஸியின் தொலைபேசிச் செய்தி மனதில் பால் வார்த்தது. "பாடசாலைக்கு அங்கீகாரம் கிடைத்துவிட்டது. இந்த ஞாயிற்றுக் கிழமை நாம் கடையாமோட்டை போகிறோம்" என்று அவர் சொன்னபோது எனது காதுகளையே என்னால் நம்ப முடியாது போனது. அந்த ஞாயிறுக்காய் மூன்று தினங்கள் காத்திருப்பது கூட மூன்று யுகம் போலிருந்தது எனக்கு.

கொழும்பிலிருந்து வெள்ளி மாலை திரும்பிய கையோடு சகோதரர்கள் முஹ்சியையும், ரஸ்மியையும் சந்தித்துவிட்டு அடுத்த ஞாயிறு காலை நாம் மூவரும் கடையாமோட்டை சென்றோம். மீண்டும் ஒரு 600 ருபாய்களை மூவருமாகப் பகிர்ந்து கொண்டோம். சமூக சேவையில் ஈடுபட்டதற்கான சிறு சிறு அபராதங்கள் அவை.சகோதரர் யஹ்யாவுடன் நீண்ட நேரம் பேசிவிட்டு அங்கீகாரக் கடிதத்தையும் பெற்றுக் கொண்டோம். 2004.01.09 முதல் புதிய பாடசாலைக்கான அங்கீகாரம் கிடைத்தது.

எல்லோரும் உதவி செய்வார்கள் என்று எண்ணியிருந்த எங்களுக்கு யாருமே உதவ முன்வரவில்லை என்பது ஒரு பக்கம் இருக்கட்டும் "ஸெய்னப் என்ற பெயரை வைத்துக்கொண்டு ஆளுக்காள் கும்மியடிக்கத் தொடங்கினார்கள். பாத்திமா என்றொரு பாடசாலை இருந்தால் அடுத்த பாடசாலையில் பாத்திமாவின் தங்கையின் பெயரில் இருக்கட்டுமே என்று எண்ணித்தான் ஸெய்னப் என்று பெயரிடத் தீர்மானித்து மற்ற இருவரிடமும் சொன்னேன். பாடசாலைக் கீதத்தைக் கூட அவரசப்பட்டு எழுதியும் முடித்துவிட்டிருந்தேன். இன்று பாடப்படும் ஸெய்னபின் பாடசாலைக் கீதம் 2006ஆம் ஆண்டு எழுதப்பட்டது. அது பாடசாலையின் கீதம் அல்ல. பிறப்பாள் என்று நான் எதிர்பார்த்த ஒரு குழந்தைக்கு அவள் பிறப்பதற்கு இரண்டு ஆண்டுகளுக்கு முன் நான் எழுதிய தாலாட்டு! ஒரு ஊமையின் தாலாட்டு!!

"ஸெய்னப்" சகோதரர் முஹ்சியின் மகளின் பெயர் எனச் சொன்னார்கள் சிலர். "ஸெய்னப்" எனது பாட்டியின் பெயர் என்று சொன்னவர்கள் இன்னும் சிலர். எதையெதையெல்லாமோ கற்பனை செய்தவர்கள் அது அல்லாஹ்வின் தூதர் முஹம்மதின் இன்னுமொரு மகளின் பெயர் என்பதை எண்ணிப்பார்க்கத் தவறிவிட்டார்கள். எல்லாவற்றுக்கும் மேலாய் இன்னுமொரு பாடசாலை அவசியம் என்பதை ஏற்க மறுத்துவிட்டார்கள்.

பலஸ்தீன உரிமைப் போராட்டத்தை வருடாவருடம் முன்னெடுக்கும் சிலர் இந்தக் காலப்பகுதியில் சற்று தடல்புடலாக அதை நடாத்தினார்கள். கோயிற் திருவிழாக்களின் இறுதி நாட்களில் வீதி வலம் வரும் "சாமி ஊர்வலம்" போல புனித பைத்துல் முகத்தஸின் மாதிரி வடிவை ஒரு வாகனத்தில் ஏற்று பவனிவந்தார்கள். அது அவர்களுக்கு புனிதப் போர். அதன் பின்னால் நிறையப் பேர். எமக்கோ ஸெய்னபும் ஒரு புனிதப் போர்தான். அதன் பின்னால் பாவம் நாங்கள் மூன்று பேர்தான்.

என்ன செய்வதென்று புரியாத நிலையில் புத்தளம் பெரிய பள்ளிவாசலின் உதவியை நாடினேன். அதற்கு இன்னுமொரு விசேச காரணமிருந்தது. நாம் மேற்கொள்ளும் முயற்சிக்கு பணம் அறிய வேண்டிய நிலை ஏற்படும். இந்தக் காலப் பகுதியில் நான் மிகச் சிரமத்துக்கு மத்தியில் எனது மகளுக்காக வீடொன்றைக் கட்டிக் கொண்டிருந்தேன். ஊர் சொத்தை எடுத்து வீடு கட்டுகிறான் என வாய்கூசாமல் சொல்வார்கள் என்பதற்காக நான் பயந்ததுதான் அதற்குக் காரணம்.

பல திட்ட அறிக்கைகளை எழுதி பெரிய பள்ளித் தலைவரின் கையொப்பத்துடன் என் மனதுக்குப் பட்ட நிறுவனங்களுக்கெல்லாம் எழுதினேன். எமது நிருவாகத்தால் இப்பாடசாலைக்கு நிதி உதவி கோரி புத்தளம் உப்பு உற்பத்தியாளர் நலன்புரிச் சங்கத்துக்கு 2005.01.17 ஆந் தேதி ஒரு கடிதம் எழுதப்பட்டது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த நிறுவனம் மௌனம் சாதித்துவிட்டது.

2005 ஒக்டோபர் மாதம் இங்கிலாந்து செல்லும் சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்து. அங்கிருக்கும் நாட்களில் அங்கிருக்கும் எம்மவர்களின் உதவியை கோரலாம் என்று எண்ணி என்னால் எழுதப்பட்ட சில திட்ட அறிக்கைகளையும் கொண்டு சென்றேன். அந்த ஆலோசனையை சகோதரர் ரஸ்மி எனக்குத் தந்திருந்தார். துரதிஸ்டவசமாக நாட்டில் சுனாமி அனர்த்தம் ஏற்பட்டுவிட்டது. இலங்கைக்கு உதவி செய்ய எல்லோருமே துடித்துக் கொண்டிருந்த நிலையில் யாரிடம் போய் ஸெய்னபுக்கு உதவி கோருவது? போதாக் குறைக்கு முடிந்தால் விரைவாக நாடு திரும்புங்கள் என்ற அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமாவிலி ருந்து வேண்டுகோள் விடுக்கப்பட்டது. உடனேயே நாடு திரும்பிவிட்டேன். அடுத்த ஒன்றரை வருட காலமாக சுனாமி நிவாரணப் பணிக்காக கிழக்கிற்கும் கொழும்புக்குமிடையில் ஆலாய்ப் பறக்க வேண்டிய நிலை ஏற்பட்டதால் ஸெய்னப் மனதை விட்டும் ஒதுங்கிவிட்டாள்.

இந்த நிலையில்தான் 2006 உள்ளூராட்சித் தேர்தல் வந்தது. அதில் போட்டியிட்ட ஆசிரியர் நவ்பல் அவர்களும், சகோதரர் முஹ்ஸி அவர்களும் ஸெய்னப் விடயத்தில் மிகுந்த ஆர்வம் காட்டினார்கள். இரண்டொரு கூட்டங்களை பெரிய பள்ளியிலும், சவீவுபுர பள்ளியிலும் வைத்து நடாத்தினார்கள். அந்தப் பிரதேசத்துத் தொண்டர்களைச் சேர்த்துக்கொண்டு பண வசூல் செய்து அத்திவாரத்தையும் போட்டார்கள். ஆனால் தேர்தல் முடிவுகள் அனைத்தையும் தலைகீழாக மாற்றிவிட அவர்கள் அந்த முயற்சியில் இருந்து தள்ளிப் போய்விட்டார்கள், சகோதரர் ரஸ்மி வெளிநாட்டுக்குப் பயணமானார், நான் தனியானேன், ஸெய்னப் அத்திவாரத்தோடு அஸ்தமித்துப் போனது.

புத்தளம் பெரிய பள்ளி நிருவாகமாவது கைகொடுக்கும் என்ற நப்பாசையில் வசூல் செய்யப்பட்ட பணத்தின் ஒரு பகுதி பெரியபள்ளி நிருவாகத்திடம் கையளிக்கப்பட்டது. அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமாவின் சுனாமி வீடமைப்புத் திட்டத்தின் நிருமாணப் பணிகளைச் செய்ய புத்தளம் நகர சபையின் தொழில் நுட்ப உத்தியோகத்தர் சகோதரர் பாசிலை நான் சிபாரிசு செய்ததால் அது அவருக்குக் கிடைத்து. முதற் பகுதி நிருமாணப் பணிகள் முடிந்த கையோடு எனக்கு ஏதாவது உதவி செய்ய வேண்டும் என அவர் நினைத்தார். அப்படி உதவி செய்வதென்றால் ஒரு தொகைப் பணத்தை புத்தளம் பெரிய பள்ளிவாசலில் கொண்டுபோய் ஸெய்னப் நிதிக்குக் கொடுக்குமாறு அவரைக் கேட்டுக்கொண்டேன். அவரால் பத்தாயிரம் ரூபாய் அந்நிதிக்கு வழங்கப்பட்டது.

உதவிகளைக் கோரி வெளிநாட்டுத் தூதரகங்களுக்கு கடிதம் எழுதி, திட்ட அறிக்கைகள் எழுதி அவற்றை பெரியபள்ளித் தலைவரின் கையெழுத்துக்காக நீட்டி எனது சொந்த செலவிலேயே அத்தனை யையும் செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டது. "முகையத்தீன் பள்ளி வாசல் என்ற பெயருடன் சென்றால் அது அரபுக்காரர்களுக்கு நஞ்சு எனவே பெயரை மாற்றிக்கொள்ளுங்கள் " என கொழும்பில் வைத்து ஒரு ஆலிம் ஆலோசனை சொன்னார். எனவே "புத்தளம் பெரிய பள்ளிவாசல்" என்ற இறப்பர் முத்திரையை எனது சொந்த செலவில் தயாரித்து அதை பெரிய பள்ளியிடம் கையளிக்க வேண்டிய பரிதாப நிலை கூட ஏற்பட்டது.

என்னால் தயாரிக்கப்பட்ட திட்ட அறிக்கை பற்றி விசாரிக்க சவுதி அரேபிய தூதரக அதிகாரிகள் தொலைபேசி மூலம் பெரிய பள்ளிவசலுடன் தொடர்புகொண்டபோது அதை விளங்கப்படுத்தும் சக்தியைக் கூட பெரிய பள்ளிவாசல் பெற்றிருக்கவில்லை. அதைத் தொடர்ந்து அவ்விடயம் பற்றி இரகசிய அறிக்கை ஒன்றைப் பெற்றுக் கொள்ள அத்தூதரகம் அப்துல்லா ஆலிமின் உதவியைக் கோர, அவர் எதையோ எழுதி அனுப்ப எதுவுமே நடக்கவில்லை.

ஒரு நாள் மாலை 7 மணியளவில் கொழும்பிலிருந்து புத்தளம் வந்து சேர்ந்து வீடு செல்ல முச்சக்கர வண்டி ஒன்றைப் பிடித்தக்கொண்டு சவீவுபுரம் வழியாக சென்றேன். ஸெய்னப்புக்காக ஆசிரியர் நவ்பல், இப்போது ஆசிரியராகிவிட்ட முஹ்ஸி ஆகியோரின் முயற்சியால் போடப்பட்ட அத்திவாரத்தின் மேல் சில தூண்கள் எழுப்பப்பட்டிருந்தன. எனக்கு ஆச்சரியமாக இருந்து. ஆனால் அத்திவாரம் மண்ணினால் நிரப்பப் பட்டிருக்கவில்லை. அதன் பின்னர்தான் உண்மை புரிந்தது பெரிய பள்ளிவாசல் நிருவாகத்திடம் கையளிக் கப்பட்ட பணத்தை வைத்துக்கொண்டு இரண்டொரு தூண்களை மாத்திரம் கட்டியிருந்த சங்கதி .பணம் முடிந்த கையோடு அவர்கள் கட்டுமானப் பணி நின்று போனது. அக்கம்பக்கத்து சிறுவர்கள் அந்தத் தூண்க ளைத் தள்ளிவிட்டு கிரிக்கட் விக்கெட்டுகளாக அவற்றைப் பாவிக்கத் தொடங்கினர்.

இப்போது சகோதரர் முஹ்ஸி, அலிகான் போன்றோர் கௌரவ பிரதி அமைச்சர் பாயிஸுக்கு எதிராக அமைச்சர் ரிசாத் பதியுத்தீனுடன் போய்ச் சேர்ந்து கொண்டார்கள். இரண்டொரு முறை சகோதரர் அலிகானிடம் போய் உதவி கோரினேன். சகோதரர் ஏ.ஓ.அலிகானும், முஹ்ஸியும் அமைச்சர் ரிசாதுடன் இருப்பதால் இந்த பாடசாலைக்கு அவர்களாக உதவ முடியும் என நான் எதிர்பார்த்தேன். உதவி செய்வ தாக வாக்களித்தார்களே தவிர வேறெங்கோ அவசியமில்லாத இடங்களிலெல்லாம் பாடசாலைக் கட்டி டங்களையும், பூங்காக்களையும் மாத்திரமே அவர்கள் கட்டிக் கொண்டிருந்தார்கள்.

இக்காலப் பகுதியில் அமைச்சர் ரிசாட் பதியுத்தீன் புத்தளம் தொகுதியில் 5 புதிய பாடசாலைக ளையே உருவாக்கி முடித்திருந்தார். சகோதரர் முஹ்ஸியும், சகோதரர் அலிகானும் அதிலிருந்து ஒரு முன்மாதிரியையும் பெற்றுக் கொள்ளவில்லை. எனவே சகோதரர் முஹ்ஸியையும் விமரிசித்து பத்திரிகை களில் எழுத வேண்டிய நிலை எனக்கு!

இதற்கிடையில் கே.ஏ. பாயிஸ் கால்நடை வள பிரதி அமைச்சராகி சில மாதங்கள் கடந்து போயி ருந்தன. அவரின் அமைச்சில் பிரத்தியேகச் செயலாளரர் பதவியை ஏற்றுக் கொள்ளுமாறு சகோதரர் யஹ்யா என்னை வற்புறுத்தத் தொடங்கியதால் அதன் மூலமாவது ஸெய்னபுக்கு உயிர் கொடுக்கலாம் என அதற்கு சம்மதித்தேன். ஆனால் என்னை விட்டுவிட ஜம்இய்யத்துல் உலமாவின் தலைவர் அஷ்ஷைக் ரிஸ்வி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மு..ப்திக்கு துளியும் விருப்பமில்லை. அவரைச் சம்மதிக்க வைக்க பெரும் போராட்டமே நடத்த வேண்டியிருந் தது. இந் நிலையில் பகரமாக கபூரிய்யா அரபுக் கல்லூரி அதிபர் மதிப்புக்குரிய அஷ்ஷைக் முபாரக் அவர்கள் தலையிட்டு அமைச்சின் பதவியை செய்யும் அதே தருவாயில் ஜம்இய்யத்துல் உலமாவின் ஊடக அலு வலர் பதவிக்கான கடமையையும் செய்வது என்ற உடன்பாட்டுடன் புதிய பதவியை ஏற்றேன்.

ஒரு நாள் அமைச்சில் எனது மேசைக்கு வந்திருந்த கடிதம் எனக்கு அதிர்ச்சியைத் தந்தது. அது தேச நிருமாண அமைச்சிலிருந்து வந்த கடிதம். பிரதி அமைச்சர் பாயிஸ் ஸெய்னப் பாடசாலைக்கு தனது பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்திலிருந்து ஒதுக்கியிருந்த ஐந்து இலட்சம் ரூபா நிதி இரத்துச் செய்யப்பட்டு வேறு இரு முக்கியத்துவமற்ற விடயங்களுக்கு ஒதுக்கப்பட்டது தொடர்பான கடிதம்...

பிரதி அமைச்சரின் அறைக்கு அக்கடிதத்துடன் சென்று அது ஏன் அவ்வாறு செய்யப்பட்டது என அவரிடம் வினவினேன். "ஸெய்னப் பாடசாலை உருவாவது சாத்தியமில்லை. எனவே அந்தப் பணத்தை பிரயோசனமான வேறு ஒன்றுக்கு ஒதுக்குங்கள் "என அவருக்கு சகோதரர் முஹ்ஸி சொன்னதாகத் தெரி வித்தபோது எனக்கு எதுவுமே புரியவில்லை. இந்த நாடகங்கள் எதுவுமே எனக்குப் புரியவில்லை.

இப்போது இங்கையில் அரசியல் காற்று மாறி மாறி வீசத் தொடங்கியது. ஜனாதிபதி மகிந்த ராஜ பக்ஸ தலைமையிலான கூட்டரசு தனது 2008ற்கான வரவு செலவுத் திட்டத்தை அங்கீகரித்தெடுக்க முடியாது திண்டாடியது. அது வரையில் அரசுக்கு விசுவாசமாக இருந்த ஸ்ரீ லங்கா முஸ்ரிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் அரசுக்கான தனது ஆதரவை விலக்கிக் கொண்டார். ஆனால் பிரதி அமைச்சர் பாயிஸ் அரசுடன் இருந்தாலேயே புத்தளம் எதிர்நோக்கும் அபாயங்களிலிருந்து அதைக் காப்பாற்ற முடியும் என புத்தளம் மக்கள் விரும்பியதால் அவர் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸில் தான் வகித்த தேசிய அமைப்பாளர் பதவியை பணயம் வைத்து அரசியல் சதுரங்கத்தில் காய் நகர்த்தலைச் செய்யும் நிலைக்குத் தள்ளப்பட்டார். அரசுக்கு விசுவாசமாக நடந்துகொண்டதால் அதிகாரங்களைப் பெறக்கூடிய நிலை ஏற் பட்டது. அது புத்தளத்துக்கு அவசியம் தேவைப்பட்ட ஒன்றாகவும் இந்தது.

"எம்மை நாமே ஆளுகின்ற அதிகாரம்" என பிரதி அமைச்சரால் அடிக்கடி வருணிக்கப்படும் இந்த அரசியல் அதிகாரத்தை வைத்துக்கொண்டு புத்தளத்தில் சடுதியான மாற்றங்களை விசேடமாக கல்வித் துறை மாற்றங்களை முன்னெடுக்க அபிவிருத்திக்கான ஆலோசனைக் குழு ஒன்றும் அமைக்கப்பட்டு அபிவிருத்தி திட்டங்கள் வகுக்கப்பட்டன.

அந்த அபிவிருத்திக்கான ஆலோசனைக் குழு இனங்கண்ட பிரச்சினைகளில் முன்னிலைப்படுத் தப்பட்ட விடயமாக அமைந்த சாஹிரா தேசிய பாடசாலை, பாத்திமா முஸ்லிம் மகளிர் கல்லூரி ஆகியவற் றைப் பிரித்து நான்கு தனித் தனியான பாடசாலைகளாக்குவது. அத்திட்டத்தை நடைமுறைப்படுத் தும் நோக்கில் புத்தளம் சாஹிரா தேசிய பாடசாலையில் பிரதி அமைச்சர் பாயிஸ் ஆசிரியர்களுடனான சந்திப்பை நடாத்தியிருந்தார். அந்த சந்திப்பு முடிந்த இரவுதான் மேலும் கால தாமதப்படுத்தாமல் "ஸெய்னப் முஸ்லிம் மகளிர் கனிஷ்ட" பாடசாலையை பாத்திமாவின் வளாகத்தினுள் ளேயே ஆரம்பிப்பது என்ற முடிவு.

இவ்விடயத்தை முன்னெடுப்பதன் பொருட்டு 2008.01.10 ஆந் தேதி பிரதி அமைச்சர் பாயிஸ் பாத்திமா முஸ்லிம் மகளீர் கல்லூரியின் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தைச் சந்தித்துப் பேசி அவர்களது இணக்கத்தைப் பெற்றுக் கொள்ள ஏற்பாடு செய்தார். அவரது முயற்சி பாடசாலை அபிவிருத்தி சங்கத்தின் ஏகோபித்த அங்கீகாரத்தைப் பெற்றது.

இதைத் தொடர்ந்து 2008.01.23 அன்று பிரதி அமைச்சர் பாயிஸ், மாகாண சபை உறுப்பினர் யஹ்யா, நகரபிதா நஸ்மி, நகர சபை உறுப்பினர் ரபீக், அபிவிருத்திக்கான ஆலோசனை குழு உறுப்பினர் களான ஆசிரியர் நமாஸ், ஆகியோரும் நானுமாக மாகாண முதலமைச்சர் அத்துல விஜேசிங்ஹ அவர்களை யும், வடமேல் மாகாண கல்விப் பணிப்பாளர் அசோக ஜயசிங்ஹ அவர்களையும் சந்தித்து ஸெய்னப் முஸ்லிம் மகளிர் கனிஷ்ட பாடசாலையை பாத்திமா முஸ்லிம் மகளிர் கல்லூரி வளாகத்தினுள் நடாத்தவும், பாத்திமா முஸ்லிம் மகளிர் கல்லூரியின் 1 முதல் 5 வரையிலான வகுப்பு மாணவர்களையும், ஆசிரியர்க ளையும் புதிய ஸெய்னப் முஸ்லிம் பெண்கள் கனிஷட பாடசாலைக்கு மாற்றுவதற்கும், சாஹிரா தேசிய பாடசாலையில் ஆரம்ப பிரிவு பொறுப்பாளர்களாக கடமையாற்றிய சகோதரி பெலஜியா அபுல் ஹுதா, சம்சாத் லுக்மான் ஆகியோரை முறையே புதிய பாடசாலையின் அதிபராகவும், உப அதிபராகவும் மாற்றும் உத்தரவும் பெற்றுக் கொள்ளப்பட்டது.

இது ஒரு வரலாற்றுச் சுருக்கம். சொல்ல நினைத்தது எத்தனையோ, சொல்லாமல் விட்டது எத்தனையோ. சொல்ல நினைத்தவைகளுக்கும் காரணம் இருப்பது போல சொல்லாமல் விட்டவைகளுக்கும் காரணம் உண்டு.

என்னைப் பொறுத்தவரையில் ஸெய்னப் சகோதரி நஸ்லியாவின் எண்ணக் கருவில் கருக்கட்டி வளர்ந்த பிள்ளை, சகோதரர்கள் முஹ்ஸி செய்னபை அந்தரத்தில் கைவிட்டுப்போன பாதுகாவலர், சகோதரர் ரஸ்மி செய்ய வழியின்றி வெளிநாடு போன கூட்டுப் பாதுகாவலர், மாகாண சபை உறுப்பினர் களான தாஹீரும், யஹ்யாவும், பிரதி அமைச்சர் பாயிஸூம் உயிர்ப்பிச்சை அளித்தவர்கள். நானோ பிள்ளைக்குப் பெயரிட்ட மாமன்.

'Every Greate Accomplishment of This World Was, At First, Great Failure"

**எம். எஸ். அப்பாஸ்**
கால்நடை வள பிரதி அமைச்சரின் பிரத்தியேகச் செயலாளர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தளத்தின் கல்வி வரலாறு - சில குறிப்புகள்

**Z.A. சன்ஹிர்**
(பாட இணைப்பாளர் சமூக விஞ்ஞானம், தகவல் தொழில்நுட்பம்)
- வலயக் கல்விப் பணிமனை, புத்தளம் -

**ஆரம்ப காலக் கல்விநிலை**

ஆரம்ப காலங்களில் புத்தளம் முஸ்லிம்கள் மார்க் கக் கல்வியை மாத்திரம் கற்கும் ஆர்வமுடையோராகக் காணப்பட்டனர். திருக்குர்ஆனே இவர்களுடைய அடிநாதமாகும். அவர்கள் மார்க்கக் கல்வியைப் பெறுவதற்கு பள்ளிவாசல்களிலிருந்த பக்கத் திண்ணைகளைப் பயன்படுத்தினர். காலஞ்செல்லச் செல்ல தமிழ் தெரிந்த ஒரு சிலர் தமது வீடுகளில் திண்ணைப் பள்ளிக் கூடங்களை நடாத்தத் தொடங்கினர். இங்கு எழுத்து, வாசிப்பு, எண் போன்றன கற்பிக்கப்பட்டன. இத்தகைய திண்ணைப் பள்ளிக் கூடமொன்று புத்தளத்தில் 04 ஆம் குறுக்குத் தெருவில் "கந்தக் குப்பை அப்பா" என்று அழைக்கப்பட்ட தமிழ் மூதறிஞர் ஒருவராலும் நடத்தப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

போர்த்துக்கேய, ஒல்லாந்த ஆட்சிக் காலங்களில் கோயிற்பற்றுப் பாடசாலைகள் நிறுவப்பட்டு மதபீடங்களால் மேற்பார்வை செய்யப்பட்டு வந்தன. புத்தளம், கட்டைக்காடு, நாவற்காடு, தேத்தாப்பளை, நரக்கள்ளி, கல்பிட்டி, உடப்பு ஆகிய இடங்களில் உள்ள பாடசாலைகள் பழமை வாய்ந்தனவாகும். இவைகளில் தமிழ் மொழி மூலக் கற்பித்தல் நடைபெற்றன.

கிடைக்கத்தக்க தகவல்களின் படி 1874 ஆம் ஆண்டில் புத்தளத்தில் அரசாங்கப் பாடசாலையொன்று இருந்துள்ளது. 24 ஆண்கள் கல்வி கற்ற இப்பாடசாலையில் ஆங்கிலத்திலும் சிங்களத்திலும் கல்விப் போதனைகள் நடைபெற்றுள்ளன. 1875 ஆம் ஆண்டில் உதவி அரசாங்க அதிபரின் கூற்றுப்படி தற்காலிகக் கட்டடமொன்றில் பெண்களுக்கான பாடசாலையொன்றும் நடைபெற்றுள்ளதாகத் தெரிய வருகிறது. 1885 ஆம் ஆண்டில் இப்பெண்கள் பாடசாலை உட்பட அனைத்து அரசாங்கப் பாடசாலைகளும் சட்ட நிரூபண சபையால் பொறுப்பேற்கப்பட்டுள்ளன. 1908 ஆம் ஆண்டில் புத்தளம் நகரத்தில் 02 ரோமன் கத்தோலிக்க மிஷனரிப் பாடசாலைகளும் 06 முஹம்மதிய்யப் பாடசாலைகளும் இருந்துள்ளன.

பிறமதப் பாடசாலைகளுக்குப் பெரும்பாலான முஸ்லிம்கள் செல்லவில்லை. 1880களில் இலங்கையில் வாழ்ந்த முஸ்லிம் அறிஞர்கள் சிலர் தமது சமூகத்தின் பின்னடைவை சுட்டிக்காட்டி நாடு பூராவும் பிரச்சாரங்களில் ஈடுபட்டனர். அவை எமதூரிலும் எதிரொலித்தன. இதற்கு மார்க்க அறிஞர்களிடையே எதிர்ப்புகள் கிளம்பின. ஆனாலும் பொதுக் கல்வியின் முக்கியத்துவம் உணரப்பட்டதால் பாடசாலைகளுக்கு செல்லும் முஸ்லிம் மாணவர்களின் தொகை காலப்போக்கில் அதிகரித்தது. செல்வந்தர்களின் பிள்ளைகளில் சிலர் பிறமதப் பாடசாலைகளுக்கும், ஏழைப் பிள்ளைகள் முஹம்மதிய்யப் பாடசாலைக்கும் செல்லத் தொடங்கினர்.

புத்தளம் மாவட்டத்தில் முதன்முதலில் ஆரம்பிக்கப்பட்ட அரச முஸ்லிம் பாடசாலைகள் புளிச்சாக்குளம், கரைத்தீவு ஆகிய இடங்களில் அமைந்துள்ளன. 17.02.1913 இல் புளிச்சாக்குளத்திலும் 02.06.1913 இல் கரைத்தீவிலும் அமைக்கபட்ட இப்பாடசாலைகளைத் தொடர்ந்து புத்தளம், கடையாமோட்டை, பள்ளிவாசல்துறை, மதவாக்குளம், திகழி, புழுதிவயல், கல்பிட்டி ஆகிய இடங்களிலும் "முஹம்மதிய்யப் பாடசாலைகள்" உருவாக்கப்பட்டன. இங்கு தமிழ், அரபு என்பனவற்றுடன் மத சாரபான பாடங்களும் போதிக்கப்பட்டன. புத்தளத்தில் சிறிய அளவிலேயே இப்பாடசாலைகள் நடைபெற்றுள்ளன.

## புத்தளம் நகர பாடசாலைகள்

**சென்.அன்றூஸ் கல்லூரி**

புத்தளம் நகரின் பழைமையான கல்லூரிகளுள் சென்.அன்றூஸ் கல்லூரியும் ஒன்றாகும். இது புத்தளம் மஸ்ஜித் வீதியில் (செட்டித்தெரு) தற்போது கூட்டுறவு நிலையம் உள்ள இடத்தில் 1818 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. இப்பாடசாலை 1956 ஆம் ஆண்டு வரை ஆண்கள் கல்லூரியாக இவ்விடத்திலேயே இயங்கியது. பின்னர் 05.01.1885 இல் கிறிஸ்தவ தேவாலயத்தால் பொறுப்பேற்கப்பட்டு சென்.அன்றூஸ் ஆங்கில ஆண்கள் பாடசாலை எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. சுயபாஷா கல்வித் திட்டத்தின் பின் இது சிங்கள மொழி மூலப் பாடசாலையாகியது.

**சென்.ஏன்ஸ் பெண்கள் ஆங்கில பாடசாலை**

தற்போதுள்ள சென்.அன்றூஸ் பாலர் பிரிவில் சென்.ஏன்ஸ் என்ற பெயரில் ஒரு பெண்கள் பாடசாலை இயங்கியது. 10.01.1961 இல் சென். அன்றூஸ் கல்லூரியை அரசு பொறுப்பேற்றது. அவ்வாண்டு பெப்ரவரியில் இக்கல்லூரி கலவன் பாடசாலையாக மாற்றப்பட்டதுடன் 04.05.1961 முதல் சென்.ஏன்ஸ் பாடசாலையுடனும் இணைக்கப்பட்டு ஒரே கல்லூரியாக மாற்றப்பட்டது. இன்று அது பாலர் பிரிவை மட்டும் கொண்ட (01 தொடக்கம் 05 வரையான தரங்கள்) தனியொரு பாடசாலையாக இயங்குகின்றது. இப்பாடசாலைகளில் சொற்ப அளவில் முஸ்லிம் பிள்ளைகள் கல்வி கற்றுள்ளனர்.

**சென்.மேரிஸ் பாடசாலை**

சென்.அன்றூஸ் கல்லூரியைப் போன்று புத்தளம் சென்.மேரிஸ் பாடசாலையும் ஆரம்பகாலத்தில் தொடங்கப்பட்டதாகும். சென்.மேரிஸ் கல்லூரி ஆரம்பிக்கப்பட்ட ஆண்டை சரியாகப் பெற முடியவில்லை. ஆரம்பத்தில் குருநாகல் வீதியில் பெற்றோல் செட்டுக்கும் புத்தளம் வைத்தியசாலைக்கும் இடையில் அமைந்துள்ள பகுதியில் இப்பாடசாலை அமைந்திருந்தது. அருட்சகோதரி அல்போனியா அவர்களின் முயற்சியினால் இது தற்போதைய இடத்திற்கு (அநுராதபுர வீதி) மாற்றப்பட்டது. இங்கு ஆரம்ப காலத்தில் தமிழ், சிங்களம ஆகிய இரு மொழிகளிலும் தனித்தனி பாடசாலைகள் இயங்கின. பாடசாலை ஒன்றினைப்புத் திட்டத்தின் பின் (1962) இது தமிழ் மொழி மூலப் பாடசாலையாகியது. இப்பாடசாலையிலும் முஸ்லிம் மாணவர்கள் கல்வி கற்றுள்ளனர்.

**அரசினர் ஆண்கள் பாடசாலை**

1921 இல் புத்தளம் போல்ஸ் வீதியில் சுமார் 500 பிள்ளைகள் படிக்கக்கூடியதான பாடசாலை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யொன்று தற்போது புத்தளம் பாத்திமா மகளிர் மகா வித்தியாலயம் அமைக்கப்பட்டுள்ள காணியில் நிறுவப்பட்டது. ஆண் பிள்ளைகள் மாத்திரம் கல்வி கற்றதால் இது "அரசினர் ஆண்கள் பாடசாலை" என்று பெயர்பெற்றது. ஆரம்பத்தில் தற்காலிகக் கட்டடத்தில் இது தொடங்கப்பட்டபோதும் பின்னர் புத்தளம் வாழ் முஸ்லிம்கள் அறவிட்டுக் கொடுத்த பணத்தையும் அரசாங்கம் நன்கொடையாக வழங்கிய பணத்தையும் கொண்டு நிரந்தரக் கட்டடமொன்று அமைக்கப்பட்டது. அதுவே தற்போதைய பாத்திமா கல்லூரியின் பிரதான மண்டபமாகும். பிரத்தியேக மதப் பாடசாலையாக இருந்த இதனை 1928 இல் அரசாங்கம் பொறுப்பேற்று சுயபாஷா பாடசாலையாக நடாத்தியது. இதில் 1950 களின் பின்னர் சிறு வகுப்புக்களில் பெண் பிள்ளைகளும் கல்வி கற்றிருப்பதாகத் தெரியவருகிறது.

1950களில் இப்பாடசாலையில் உயர் வகுப்புக்கள் தமிழ் மொழி மூலம் நடைபெறவில்லை. மாலை வேளையில் ஆங்கில மொழியில் பாடங்கள் இடம்பெற்றன. சாஹிரா கல்லூரியும் ஆங்கில மொழி மூலப் பாடசாலையாக இருந்ததனால் தமிழ் மொழியில் பயிலும் உயர் வகுப்பு மாணவர்கள் கல்வியைத் தொடர்வதற்கு சிரமப்பட்டனர். இதனால் அவர்கள் ஹெட்டிவத்த (தற்போதைய தர்கா டவுன்) போன்ற இடங்களுக்குச் சென்று தமது கல்வியைத் தொடர்ந்தனர். 1960 களில் மாலை நேர சிங்கள மொழி மூல வகுப்புக்கள் நடைபெற்றுள்ளதாகத் தெரிய வருகிறது. சுமார் ஒரு வருடம் நடைபெற்ற இதற்கு ஜனாப். செய்யித் (அப்துல் றஹீம்) அவர்கள் பொறுப்பாசிரியராகக் கடமையாற்றியுள்ளார்கள்.

புத்தளம் வாழ் முஸ்லிம்கள் இப்பாடசாலையைப் பொதுவாக "கால ஸ்கூல்" (Gala School) என அழைத்தனர். இப்பாடசாலைக்குப் பக்கத்திலிருந்த மைதானத்தில் (தற்போது மஸ்ஜிதுல் ஹுதா அமைந்துள்ள மைதானம்) மாட்டு வண்டில் வியாபாரிகள் தரித்து நிற்பது வழக்கம். இத்தகைய இடங்களை சிங்களத்தில் "கால" என அழைப்பர். இதனடிப்படையில் போல்ஸ் வீதி "கால றோட்" எனவும் மரைக்கார் வீதியில் அமைந்திருக்கும் பாலம் "கால பாலம்" எனவும் அங்கிருந்த ஒரு கடை "கால கடை" எனவும் அழைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

**பெண்கள் பாடசாலை**

1925ஆம் ஆண்டளவில் முஸ்லிம் பெண் பிள்ளைகளுக்கான பாடசாலையொன்று செட்டித்தெருவில் தண்ணீர் தாங்கிக் கோபுரம் அமைந்துள்ள இடத்தில் ஆரம்பிக்கப்பட்டது. இந்தக் காணியில் முன்பு குளம் ஒன்று காணப்பட்டது. இது "கப்படையார் குளம்" (கப்பல் உடையார்) என்று அழைக்கப்பட்டது. பின்பு அக்குளம் மண்போட்டு நிரப்பப்பட்டு அந்த இடத்திலேயே இப்பெண்கள் பாடசாலை நிறுவப்பட்டது. இப்பாடசாலையே இன்றைய பாத்திமா கல்லூரியின் ஆரம்பமாகும். பின்னர் இது 1938 இல் மன்னார் வீதியில் தற்போது சாஹிரா கல்லூரியின் ஆரம்பப் பிரிவு உள்ள இடத்தில் ஊரவர்களால் கட்டிக் கொடுக்கப்பட்ட கட்டடத்திற்கு மாற்றப்பட்டது. இக்கட்டடம் அமைந்துள்ள காணி M.C.M. நெய்னா மரைக்கார், E.S.M. இப்ராஹிம் நெய்னா மரைக்கார் ஆகியோரால் வழங்கப்பட்டதாகும். இக்கட்டடமே சாஹிரா பாலர் பிரிவின் தற்போதைய பிரதான மண்டபமாகும்.

**ஜன ஆசார சங்கமும் கல்விச் செயற்பாடுகளும்**

ஜனாப். M.A. சாலிஹ் என்பவருடைய டயரியிலிருந்து தொகுக்கப்பட்ட குறிப்புக்கள் சில :-

10.01.1930 இல் முஸ்லிம் ஜன ஆசார சங்கம் நிறுவப்பட்டது. (Muslim Social Service League) அதன் தலைவராக H.S. இஸ்மாயில் அவர்களும் செயலாளராக M.A. சாலிஹ் அவர்களும் தெரிவாகினர். M.C.M. செல்லமரைக்கார், T.S.M. அப்பாஸ் மரைக்கார் (த.செ.மு), M.A. குணாவிஜாயா, U.A. சமத், U.S. முஹம்மத் (யூ.செ), M.N.H. ஹமீது ஹுசைன் மரைக்கார் (மு.நா.க), M.M. உமர், V. சாஹுல் ஹமீது (சாவன்னா) ஆகியோர் இதன் ஏனைய அங்கத்தவர்களாவர்.

08.05.1929 அன்று புத்தளம் முஸ்லிம் வாலிபர் சங்கக் கட்டிடத்தில் ஜனாப். H.S. இஸ்மாயில் அவர்களால் கூட்டப்பட்ட கூட்டத்தில் புத்தளத்தின் அன்றைய கல்வி நிலை பற்றி ஆராயப்பட்டு 13.05. 1929 அன்று புத்தளம் முஸ்லிம்கள் கையொப்பமிட்டு கல்வி அதிகாரிக்கு அனுப்பிய கடிதத்தின் சாராம்சம் பின்வருமாறு:-

"புத்தளம் தமிழ் பாடசாலையிலுள்ள ஆசிரியர்கள் மாறிச் சென்றதன் பின்பு 16 வயதுப் பையனின் பராமரிப்பில் 200 க்கும் மேற்பட்ட பிள்ளைகள் இருக்கின்றனர். அரசாங்கம் இப்பிள்ளைகளின் முன்னேற்றத்தில் எவ்வித கரிசனையும் எடுக்கவில்லை. அதனால் பிள்ளைகளை விலக்கி திண்ணைப் பள்ளிக்கூடங்கட்கு அனுப்ப உத்தேசிக்கின்றனர். மலேரியா நோய், குறைந்த சம்பளம் ஆகியவை காரணமாக ஆசிரியர் வருவதற்குத் தயக்கம் காட்டுவதாகத் தெரிவதால் தமிழ் கற்பிப்பதற்குத் தகுதியுள்ள உள்ளூர் ஆசிரியர்களை சேர்க்குமாறும் அப்பள்ளிக்கூட மேற்பார்வைக்கு கௌரவமாக வேலை செய்யக்கூடிய உள்ளூர் மனேஜர் ஒருவரை நியமிக்கும்படியும் கேட்கின்றோம். அதற்கு H.S. இஸ்மாயிலை நியமிக்கும்படியும் கேட்கின்றோம். அதிகமானோர் தேவையாயின் M.C.M. செல்லமரைக்கார், M.A. சாலிஹ், M.M. உமர், T.S.M. அப்பாஸ் மரைக்கார், S.M.A. ஜலால்தீன் மரைக்கார் ஆகியோரை நியமிக்கலாம்".

13.09.1930 அன்று கூட்டப்பட்ட கூட்டத்தில், புத்தளம் அரசினர் பாடசாலையில் ஆங்கிலக் கல்வி போதிக்கும் படி "கலா காரிய துரந்தரருக்கு" கடிதம் எழுதுவதாகத் தீர்மானிக்கப்பட்டது. மேலும் ஜும்ஆவுக்குப் பிள்ளைகள் போவதற்காக ஆண் பாடசாலையை 12.00 மணிக்கு மூடுவதற்கு 15.10.1930 அன்று "கலா காரிய துரந்தரரிடமிருந்து" இச்சங்கம் அனுமதியைப் பெற்றுக்கொண்டது.

21.07.1931 அன்று பின்வரும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன:-

01. செட்டித் தெருவில் அமைந்திருக்கும் பெண்கள் பாடசாலைக்கு பகரமாக புதிய இடத்தில் அவர்களுக்கான பாடசாலையொன்றை அமைத்தல்.
02. போல்ஸ் வீதியில் அமைந்திருக்கும் ஆண் பாடசாலையை அபிவிருத்தி செய்தல்.

**அரசினர் ஆண்கள் பாடசாலை இடம்மாறல்**

1942இல் இரண்டாம் உலக மகா யுத்தத்தின் போது புத்தளம் நகர மக்கள் விமானத் தாக்குதல்களுக்குப் பயந்து வேறு ஒதுக்குப் புறங்களை நாடினர். இதன் காரணமாக போல்ஸ் வீதியில் அமைந்திருந்த ஆண்கள் பாடசாலை மாணவர்களின் வரவும் குறைந்தது. அதேவேளை இப்பாடசாலையின் பிரதான மண்டபம் இக்காலப் பகுதியில் அரசின் உணவுக் களஞ்சியமாகவும் பயன்ப


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டுத்தப்பட்டது. பாடசாலைக்கு சமுகமளிக்கும் மாண வர்கள் பெண்கள் பாடசாலைக்கு இடம்மாற்றப்பட் டனர். (தற்போதைய சாஹிரா பாலர் பிரிவு) அங்கி ருந்த பெண் பிள்ளைகள் அவ்வளவுக்குள்ளேயே இருந்த தற்காலிகக் கட்டடமொன்றுக்கு மாற்றப் பட்டனர். இத்தற்காலிகக் கட்டடம் பாடசாலையின் பிரதான கட்டடத்திற்கு முன்னால் அமைந்திருந்தது.

தனியான நிர்வாகத்தின் கீழ் பாடசாலை நடைபெற்ற போதும் ஆண்களும் பெண்களும் ஒரே இடத்தில் படிப்பதை பெற்றோர் விரும்பவில்லை. அத்துடன் யுத்த பீதி குறைய மாணவர் வரவும் அதிகரிக்கத் தொடங்கியது. இந்நிலையில் ஆண்கள் பாடசாலையில் (போல்ஸ் வீதி) தற்காலிகக் கட்டட மொன்று அமைக்கப்பட்டு ஆண் பிள்ளைகள் அங்கு மாற்றப்பட்டனர். இக்கட்டடம் கல்லூரியின் பிரதான மண்டபத்துக்கு முன்னால் உள்ள மைதானத்தின் இடப்புறமாக (தற்போது சிறிய கேட் உள்ள பகுதி) அமைந்திருந்தது. யுத்தத்தின் பின்னர் உணவுக் களஞ்சியம் குட்ஷேட் வீதிக்கு மாற்றப்பட மாணவர் கள் மீண்டும் அக்கட்டடத்தைப் பயன்படுத்தத் தொ டங்கினர்.

**சாஹிரா கல்லூரி**

இரண்டாம் உலக மகா யுத்த காலத்தில் கொழும்பு நகரம் ஜப்பானியரது குண்டு வீச்சுக்கு இலக்காகும் ஆபத்து ஏற்பட்டதும் கொழும்பு சாஹிரா கல்லூரி உட்பட பல பெரிய கல்லூரிகள் மூடப்பட் டன. இதனால் முஸ்லிம் மாணவரின் கல்வி பாதிக்கப் படுமென அஞ்சிய T.B. ஜாயா அவர்கள் நாட்டின் பல இடங்களில் சாஹிராவின் கிளைகளை நிறுவினார்.

இக்காலப் பகுதியில் H.S. இஸ்மாயில் அவர்கள் கொழும்பில் இயங்கிய இஸ்லாமிய மறும லர்ச்சி இயக்கங்களுடன் நெருங்கிய தொடர்புக ளைக் கொண்டிருந்தார். அன்னாரது பெரு முயற்சி யினால் புத்தளம் மாவட்ட முஸ்லிம் கல்விச் சங்கம் (Puttalam District Muslim Education Society) நிறுவப்பட்டு அதனூடாகப் புத்தளத்திலும் சாஹிரா வின் கிளையொன்றைத் திறப்பதற்கானத் தீர்மானம் எடுக்கப்பட்டது. இதன் பிரகாரம் 12.02.1945 இல் புத்தளத்தில் சாஹிராவின் கிளை அப்போதைய கல்வி மந்திரி C.W.W. கன்னங்கர அவர்களால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. அதன் முகாமையாள ராக H.S. இஸ்மாயில் அவர்கள் கடமை புரிந்தார் கள். இது ஆரம்பத்தில் புத்தளம் நோர்த் வீதியி லுள்ள பீ.எஸ்.எம்.எம். பளுலூன் மரைக்கார், இ.செ.மு. இபுறாஹிம் நெய்னா மரைக்கார் (E.S.M), சி.அ.க. ஹமீது ஹுஸைன் மரைக்கார் ஆகியோருக்குச் சொந்தமான வீட்டில் இயங்கியது. 28.12.1949 இல் அது மன்னார் வீதியில் தற்போதைய இடத்திற்கு மாற்றப்பட்டது.

**பாடசாலைகள் இணைப்பு. (Amalgamation)**

1961வரை புத்தளத்தில் இருந்த பாடசா லைகள் பின்வருமாறு :-

1. சென்.மேரிஸ் தமிழ் கலவன் பாடசாலை.
2. சென்.மேரிஸ் சிங்களக் கலவன் பாடசாலை.
3. சென்.அன்றூஸ் ஆங்கில ஆண்கள் பாடசாலை.
4. சென்.ஏன்ஸ் ஆங்கில பெண்கள் பாடசாலை.
5. சாஹிரா கல்லூரி. (கலவன் பாடசாலை)
6. அரசினர் ஆண்கள் பாடசாலை.
7. அரசினர் பெண்கள் பாடசாலை.

இவற்றுள் முதல் நான்கும் கத்தோலிக்கத் திருச்சபையால் நடாத்தப்பட்ட உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளாகும். சாஹிரா கல்லூரி உதவி நன்கொடை பெறும் தனியார் பாடசாலை யாகும். இப்பாடசாலைகள் யாவும் அரசின் தனியார் பாடசாலைகள் சுவீகரிப்புத் திட்டத்தின் கீழ் 01.02.1962ம் திகதியிலிருந்து மீளமைக்கப்பட்டு அரசாங்கப் பாடசாலைகளாக மாற்றப்பட்டன. (Intergration of Government and Assisted Schools Act No.8 of 1961) இதன் பிரகாரம் பின்வரும் மாற் றங்கள் இடம்பெற்று பாடசாலைகள் இணைக்கப் பட்டன. (Amalgamation)

போல்ஸ் வீதியில் அமைந்திருந்த அரசினர் ஆண்கள் பாடசாலை முஸ்லிம் பெண்களுக்குரிய பாடசாலையாக மாறறம் பெற்றதுடன் சாஹிரா கல் லூரி ஆண்கள் பாடசாலையாகியது. எனவே அரசி னர் ஆண்கள் பாடசாலை (போல்ஸ் வீதி) மாணவர் களும் ஆசிரியர்களும் சாஹிரா கல்லூரிக்கு இடம் மாறினர்.

மன்னார் வீதியில் அமைந்திருந்த அரசினர் பெண்கள் பாடசாலை மாணவிகளும் ஆசிரியர்களும் போல்ஸ் வீதியில் அமைந்திருந்த பாடசாலைக்கு மாறினர். அத்துடன் சாஹிரா கல்லூரி, சென்.ஏன்ஸ் (தற்போதைய சென்.அன்றூஸ் பாலர் பிரிவு), சென். மேரிஸ் ஆகிய பாடசாலைகளில் பயின்ற பெண் பிள்ளைகளும் இப்பாடசாலைக்கு மாறினர். மன்னார் வீதியில் பெண்கள் பயின்ற இடம் சாஹிரா கல்லூரி யின் பாலர் பிரிவாக இயங்க ஆரம்பித்தது.

புத்தளம் சென்.மேரிஸ் சிங்கள வித்தியா லயத்தில் இருந்த மாணவர்கள் சென்.அன்றூஸ் மகா வித்தியாலயத்துக்கும் புத்தளம் ஆனந்த மகா வித்தி யாலயத்துக்கும் இடமாற்றப்பட்டு அவை இரண்டும் கலவன் பாடசாலைகளாகின. ஆனந்த மகா வித்தி யாலயம் புதிதாக குட்ஷேட் வீதியில் அமைக்கப் பட்டது.

01.02.1962 இல் புத்தளம் நகரப் பாடசாலை கள் பின்வருமாறு மீளமைக்கப்பட்டு அரசின் பாடசா லைகளாக இயங்கி வருகின்றன:-

01. பாத்திமா மகளிர் மகா வித்தியாலயம்
02. சாஹிரா கல்லூரி
03. சென்.அன்றூஸ் சிங்கள மகா வித்தியாலயம்
04. சென்.மேரிஸ் தமிழ் மகா வித்தியாலயம்
05. ஆனந்த சிங்கள மகா வித்தியாலயம்

## பாத்திமா மகளிர் மகா வித்தியாலயம்

**ஆரம்பம்**

அரசினால் மேற்கொள்ளப்பட்ட பாடசாலை இணைப்புக்களின் (Amalgamation) பிரகாரம் போல்ஸ் வீதி அரசினர் ஆண்கள் பாடசாலை அமைந்திருந்த இடத்தில் பாத்திமா மகளிர் மகா வித்தியாலயம் 01.02.1962 இல் ஆரம்பிக்கப்பட்டது. மன்னார் வீதியில் அமைந்திருந்த பெண்கள் பாடசா லையின் உதவி தலைமை ஆசிரியையாகக் கடமை யாற்றிய திருமதி. சித்தி ஜெசீமா அஹமடொன் இப்பாடசாலையின் முதலாவது அதிபராகக் கடமை யேற்றார். கடமையேற்றபோது அவர் பதிலதிபராக வே பொறுப்புக்களை ஏற்றுக்கொண்டபோதிலும் அவரே பாடசாலையின் முதலாவது அதிபருமாவார்.

பாடசாலை ஆரம்பிக்கப்பட்ட போது அரசினர் பெண்கள் பாடசாலையில் இருந்த 312 மாணவிகளுடன் நகரில் இருந்த வேறு பாடசாலை களில் பயின்ற மாணவிகளும் இங்கு சேர்த்துக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ளப்பட்டனர். அதன் விபரம் பின்வருமாறு:-

01. சாஹிரா கல்லூரி - 172 மாணவிகள்.
02. சென்.ஏன்ஸ் பெண்கள் பாடசாலை - 70 மாணவிகள்.
03. சென்.மேரிஸ் தமிழ் மகா வித்தியாலயம் 48 மாணவிகள்.

பாடசாலை சேர்வு இடாப்பில் முதலாம் இலக்க மாணவியாக செட்டித் தெருவைச் சேர்ந்த M.A. சாபார் (இலிகிதர்) என்பவரின் மகள் பதிவு செய்யப்பட்டுள்ளார்.

பாடசாலை ஆரம்பிக்கப்பட்டபோது 38 மாண விகளின் பெயர் விபரங்களடங்கிய பட்டியல் ஏனைய பாடசாலைகளிலிருந்து பாத்திமா கல்லூரிக்கு வழங் கப்படவில்லை. எனினும் அவர்களும் பாடசாலையில் முதல் நாள் அனுமதி பெற்றனர். எனவே மொத்தம் 640 மாணவிகளுடன் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டது. இருப்பினும் சேர்விடாப்பில் 639 மாணவிகளின் பெயர் கள் பதிவாகியுள்ளன. இவர்களுள் 540 மாணவிகள் முதல் நாள் சமுகமளித்திருந்தனர்.

அரசினர் பெண்கள் பாடசாலையில் கடமை யாற்றிய 16 ஆசிரியர்களுடன் சாஹிரா கல்லூரி யிலிருந்து மூவரும் சென்.ஏன்ஸ் ஆங்கில பாடசா லையிலிருந்து ஒருவரும் இக்கல்லூரிக்கு இடமாற் றப்பட்டனர். பாடசாலை தொடங்கப்பட்ட மறுநாள் முதலாம் தவணை விடுமுறைக்காக பாடசாலை மூடப்பட்டது.

பாத்திமா மகளிர் மகா வித்தியாலயம் ஆரம் பிக்கப்பட்ட போது மூன்று கட்டடங்கள் இருந்தன. அவற்றுள் ஒன்று பிரதான மண்டபமாகும். இதனுடன் இணைந்த வகையில் ஆசிரியர் விடுதியும் சமையல றையும் அமைந்திருந்தது. இதற்கு பக்கத்தில் இருந் த Sheet கட்டடம் அடுத்த கட்டடமாகும். அது தற்போது உடைக்கப்பட்டுவிட்டது. விஞ்ஞான ஆய்வு கூடம் மற்றையதாகும்.

**பெயரும் தரங்களும்**

1962இல் இப்பாடசாலை ஆரம்பிக்கப பட்டபோது பாத்திமா மகளிர் மகா வித்தியாலயம் எனப் பெயரிடப்பட்டது. முஹம்மது நபி (ஸல்) அவர்களின் மகளின் பெயரே பாத்திமா என்பதாகும். இப்பெயரை புத்தளத்தின் முன்னாள் பாராளுமன்றப் பிரதிநிதியாக இருந்த முன்னாள் நிதியமைச்சர் அல் ஹாஜ். M.H.M. நெய்னா மரைக்கார் அவர்கள் சூட்டியுள்ளார்கள். இபபெயர் அன்றைய வட்டாரக் கல்வி அதிகாரியாக இருந்த ஜனாப். A.L.M. இஸ்மா யில் அவர்களால் சூட்டப்பட்டது என்ற ஒரு கருத்தும் உண்டு. எனினும் பாடசாலையின் முதல் அதிபர அவர்கள், அல்ஹாஜ். M.H.M. நெய்னா மரைக்கார் அவர்களாலேயே சூட்டப்பட்டது எனத் தெரிவிக் கின்றார். இதனை அல்ஹாஜ். A.N.M. ஷாஜஹான் அவர்களும் அங்கீகரிக்கின்றார்.

கல்வி அமைச்சின் செயலாளரின் 07.07.1986 திகதியும் P.M.D/ASC/1 இலக்கமும் கொண்ட கடி தத்தின் பிரகாரம் 08.01.1986 இல் புத்தளம் கொத்த ணிகளுக்கான தலைமைப் பாடசாலையாக பாத்திமா கல்லூரி தரம் உயர்த்தப்பட்டது. 01.06.1989 இல் இது வடமேல் மாகாண முன்னணிப் பாடசாலைகளுள் ஒன்றாக மாற்றப்பட்டது. 23.08.1999 இல் தேசிய மீலாத்விழா இப்பாடசாலையில் இடம்பெற்றது முதல் இதனை தேசியப் பாடசாலையாகத் தரம் உயர்த்து வதற்கான முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டன.

**இலச்சினை**

பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது முதல் பல் வேறு இலச்சினைகள் பயன்படுத்தப்பட்டு வந்துள் என. ஆரம்ப இலச்சினையை ஆசிரியர் A.M.M. நிஸாம் அவர்கள் வரைந்துள்ளார்கள். பின்னர் ஓவி யர் S.S.M. ரபீக் அவர்களால் இவ்விலச்சினை வரை யப்பட்டது. தேசிய மீலாத் விழா இப்பாடசாலையில் நடைபெற்ற போது சில காரணங்களைக் கருத்திற் கொண்டு பாடசாலையின் பெயரில்லாத இலச்சினை வரையப்பட்டு அது இன்றும் பயன்படுத்தப்பட்டு வரு கின்றது.

**பாடசாலைக் கீதம்**

1962 இல் பாத்திமா மகளிர் மகா வித்தியா லயம் ஆரம்பிக்கப்பட்ட போது இந்தியாவின் தேசிய கீதத்தின் (ஜனகனமன) இராகத்தில் பாடசாலை கீதமொன்று பாடப்பட்டு வந்துள்ளது.

இப்பாடலின் சில வரிகள்:-

உலகினர் போற்றிடும்
இறையே எம் தலைவா
உனதருள் வேண்டுகிறோமே !

புத்தள நகர் தரும் பாத்திமாவென்னும்
உயர்திரு (தகு) பெண் கலாமன்றம்

(ஜயமே ஜயமே ஜயமே ஜய ஜய ஜய ஜயமே)

காலப்போக்கில் இப்பாடலுக்குப் பதிலாக "வாழ்க வாழ்க பாட்டாளி" என்ற சினிமா பாடலின் இராகத்தில் வேறொரு பாடல் இசைக்கப்பட்டுள் ளதாகத் தெரியவருகிறது.

இப்பாடல் பின்வருமாறு அமைந்திருந்தது:-

நானிலம் போற்றவே நாமே
நாளும் நாளும் இறையை வேண்டி
வளர்த்திடுவோம் நுண்கலையை
(நானிலம்......)

வாழ்க வாழ்க கலைக்கூடமே
வளர்க வளர்க அதன் சேவையே...... (ii)

பின்னர் 1988ஆம் ஆண்டில் இசைத் தென் றல் ஜனாப். M.A.M. செல்ல மரைக்கார் அவர்க ளால் தற்போதைய பாடசாலைக் கீதம் இயற்றப் பட்டது. இது "இன்சாபுக மன்சில்ஹயே" என்ற ஹிந் திப் பாடலின் இராகத்தைத் தழுவி எழுதப்பட்ட தாகும்.

**அரசினர் ஆண்கள் பாடசாலையில் சேவையாற்றிய அதிபர்கள்**

அரசினர் ஆண்கள் பாடசாலையில் முதல் தலைமை ஆசிரியராக யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த திரு. கந்தப்பு அவர்கள் கடமையாற்றியுள்ளார்கள். அதனைத் தொடர்ந்து திரு. P. இராசையா, திரு. N.J. அல்பிரட், திரு. K. குமாரசாமி, திரு. M.N. ராஜா, திரு. V. கந்தையா, ஜனாப். A.M.S. இபுறாஹீம் (வதூத் ஆசிரியர்), திரு. S.A. அம்பலவாணர், ஜனாப். M.H.M. அப்துர் ரசாக் ஆகியோர் பாடசா லைத் தலைவர்களாகக் (Heads Of Schools) கடமையாற்றியுள்ளனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்னார் வீதியில் இயங்கி வந்த பெண்கள் பாடசாலையில் திருமதி. இராசையா, திருமதி. E.T. ராஜா, திருமதி. E. பெஞ்சமின் ஆகியோர் அதிபர்களாகக் கடமையாற்றியுள்ளனர். மேலும் R.M. பத்திராயன் பிள்ளை, P. நடராஜா ஆகியோர் பதில் தலைமை ஆசிரியர்களாக இருந்துள்ளனர். 01.04.1969 முதல் திருமதி. S.J. அஹமடொன் பதில் தலைமை ஆசிரியையாக பெண்கள் பாடசாலையை பொறுப்பேற்றார். பின்னர் இவர் அதிபராகவும் கடமையாற்றியுள்ளார். 1962 இல் இடம்பெற்ற பாடசாலை இணைப்பு நடவடிக்கைகளின் பின்னர் இவர் பாத்திமா மகளிர் மகா வித்தியாலத்தின் முதல் அதிபராகக் கடமையேற்றார்.

**ஸெய்னப் முஸ்லிம் மகளிர் கனிஷ்ட வித்தியாலயம்**

2003 ஆம் ஆண்டில் சாஹிராவில் இருந்து பெருந்தொகையான மாணவிகள் இங்கு வந்ததனால் இட நெருக்கடி ஏற்பட்டது. இந்நிலையில் பாலர் பிரிவுக்கென தனியானதொரு பாடசாலையின் அவசியத்தை அன்றைய பாடசாலை அபிவிருத்திச் சங்கம் முன்மொழிந்தது.

2004 கல்வியாண்டு ஆரம்பிக்கப்பட்ட போது Sheet கட்டடம், Siyawasa நூல் நிலையம் என்பன உடைக்கப்பட்டிருந்தன. புதிய அனுமதிக்கான மாணவரின் தொகையும் அதிகரித்துக் காணப்பட்டது. மீண்டும் கட்டடப் பிரச்சினை பூதாகாரமாகத் தலைதூக்கியது. அத்துடன் அதிகரித்த மாணவர் தொகையால் நிர்வாகச் சிக்கல்களும் எழுந்தன.

எனவே புதியதொரு பெண்கள் பாடசாலை உருவாக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கைகள் பலமாக முன்னெடுக்கப்பட்டு இன்று கால்நடை அமைச்சர் பாயிஸ் அவர்களின் அதிரடி முயற்சியினால் இப்பாடசாலை திறந்து வைக்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

குறிப்பு : இக்கட்டுரையை எழுதுவதற்கு பல தகவல்களை தந்துதவிய கல்வியதிகாரி, கலாபூஷணம் மர்ஹூம் அல்ஹாஜ். ஏ.என்.எம். ஷாஜஹான் அவர்களுக்கு அல்லாஹ் அருள் புரிவானாக!

## பாத்திமா மகளிர் மகா வித்தியாலயத்தில் சேவையாற்றிய அதிபர்கள்

| பெயர்கள் | பதவி வகித்த காலம் | தரம் |
|---|---|---|
| 01. திருமதி. S.J. அஹமடொன் | 01.02.1962 - 02.07.1968 | TT1, Eng (Sp) Trd |
| 02. திருமதி. B.C. ஹலால்தீன் | 03.07.1968 - 07.07.1968 | S.L.E.A.S |
| 03. திருமதி. S.A.A. ஹயரியா | 08.07.1968 - 09.07.1968 | TT1 |
| 04. திருமதி. S.J. அஹமடொன் | 09.07.1968 - 30.06.1970 | TT1, Eng (Sp) Trd |
| 05. திருமதி. S.A.A. ஹயரியா | 30.06.1970 - 12.08.1970 | TT1 |
| 06. திருமதி. M.A. கரீம் | 13.08.1970 - 13.10.1970 | B.A. (Cey) |
| 07. திருமதி. S.A.A. ஹயரியா | 13.10.1970 - 09.02.1972 | TT1 |
| 08. திருமதி. M.I. ராலியா உம்மா | 09.02.1972 - 06.03.1972 | TT1 |
| 09. திருமதி. K.A. கபூர் | 06.03.1972 - 10.07.1974 | B.Sc. Dip.in Ed |
| 10. திருமதி. S.A.A. ஹயரியா | 11.07.1974 - 30.01.1977 | TT1 |
| 11. திருமதி. R. தல்ஹா | 31.01.1977 - 10.08.1977 | Eng (Sp) Trd |
| 12. திருமதி. R.B.M. ஜலீல் | 11.08.1977 - 28.10.1977 | TT1 |
| 13. திருமதி. S.J. அஹமடொன் | 28.10.1977 - 20.06.1980 | TT1, Eng (Sp) Trd |
| 14. திருமதி. R.B.M. ஜலீல் | 21.06.1980 - 25.02.1983 | TT1 |
| 15. திரு. M.S.M அபூபைதா | 26.02.1983 - 16.07.1984 | TT1 |
| 16. திருமதி. B. சாபார் | 16.07.1984 - 01.08.1984 | Eng (Sp) Trd |
| 17. திருமதி. S.F. மஜீத் | 01.08.1984 - 25.05.1995 | S.L.E.A.S |
| 18. திருமதி. B. சாபார் | 26.05.1995 - 01.03.1996 | Eng (Sp) Trd |
| 19. திருமதி. H.N.A. மொஹிதீன் | 02.031996 - 31.12.1996 | H.Sc (Sp) Trd |
| 20. திருமதி. K. வேலாயுதம் | 31.12.1996 - 24.04.1997 | B.A. (Cey). Dip.in Ed. |
| 21. திருமதி. M.N. சித்தி பரீனா | 24.04.1997 - 20.05.2004 | B.A. (Cey). Dip.in Ed. SLPS II |
| 22. திருமதி. K. வேலாயுதம் | 21.05.2004 - 14.06.2004 | B.A. (Cey). Dip.in Ed. |
| 23. திருமதி. S. றிஸ்வான் | 15.06.2004 - இன்று வரை | Bsc. (Cey). Dip.in.Ed. |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சம்பவத்திரட்டுப் புத்தகத்திலிருந்து......

03.06.1938 - உதவி உபாத்தியாயர் .................. இன்று பாடசாலை உலகுக்கு வந்தார். வந்தும் பாடங்களைப் படிப்பிப்பதற்குத் தகுதி அற்றவராக இருக்கிறார்.

04.07.1938 - பெரும்பாக வித்தியாதரிசியவர்களின் No.W.D.2.7.38 கடித உத்தரவின் பிரகாரம் பெண் பாடசாலையில் வைக்கப்பட்டிருந்த ஆண் பாடசாலைப் பாலர் கீழ்ப் பிரிவும் ஆசிரியரும் அரசினர் ஆண் பாடசாலையில் சேர்த்துக்கொள்ளப்பட்டனர்.

22.07.1938 - இரண்டாம் வகுப்பிலுள்ள முகம்மது இபுனு என்னும் பையனுக்கு வகுப்பு உபாத்தியாயர் ...................... காலில் அடித்துக்காயம் ஏற்பட்டிருப்பதாக அப்பையனின் பிதா வந்து அறிவித்தார். நான் அப்பையனைப் பார்த்தேன். காலில் ஒரு ஆடியின் தடிப்பு காணப்பட்டது. ஆசிரியரை வினவிய போது பையன் அடிக்கடி உத்தரவின்றி வகுப்பை விட்டு வெளியே சென்று வந்தானானதால் தாம் அடித்த பொழுது தவறுதலாக காலில் விழுந்ததென்று சொன்னார்.

24.11.1938 - இன்று முஸ்லீம்களின் நோன்புப் பெருநாளுக்காக அரசினர் லீவு அட்டவணைப்படி லீவு கொடுக்கப்பட்டது.

01.06.1939 - 966, 02 ஆம் வகுப்பு மாணவர் மஸ்நூர் என்பவர் காது வருத்தத்திற்கு மருந்து போட 9.30 மணிக்கு வைத்தியசாலை சென்றார்.

14.11.1939 - நோன்புப் பெருநாள் காரணமாக இன்று பாடசாலைக்கு வந்த பிள்ளைகள் 05 பேர் ஆகையால் பாடசாலை 10.00 க்கு மூடப்பட்டது.

24.11.1939 - மு. அப்துல் காசிம் இன்று பாடசாலைக்கு வந்தான். ஆனால் இடாப்பு கூப்பிட்டபோது மறுமொழி சொல்லாமலிருந்ததால் வரவின்மை அடையாளமிடப்பட்டது.

22.1.1940 - ஹச்சிப் பெருநாள் காரணமாக இன்று பாடசாலைக்கு 18 பிள்ளைகள் மாத்திரம் சமுகமளித்தனர்.

06.05.1940 - இன்று இரவு முழுவதும் மழை பெய்தபடியால் பாடசாலை தளபாடங்கள் நனைந்தும் தளத்தில் மழைத் தண்ணீர் நிறைந்தும் இருந்தபடியால் பாடசாலை வைக்க முடியவில்லை. 11.00 மணியளவில் பாடசாலை விடப்பட்டது. தளபாடங்கள் எல்லா வற்றையும் கழுவிச் சுத்தமாக்கினோம்.

23.09.1941 - இன்று முஸ்லீம் பிள்ளைகளின் தலை நோன்பு காரணமாக வரவு 21. வந்த பிள்ளைகளும் படியாமல் நித்திரை தூங்குகின்றார்கள். ஆகையால் 12.00 மணிக்குப் பாடசாலையை மூடுகிறேன்.

25.11.1941 - இன்று மூன்றாந்தரத்தில் 997 சேர்விலக்கமுடைய க.மு. அனிபாவின் வராமை அடையாளம் வரவாகக் கணிக்கப்படும்.

05.05.1942 - இன்று காத்திராப்பிரகாரமாக இப்பகுதி உதவி அரசாங்க ஏசன்றுத் துரையவர்கள் எனது நிவசத்தைக் காலியாக்கும் படி அறிவித்துள்ளபடியால் அதற்காகச் சாமான்களை அப்புறப்படுத்துவதற்காக இன்று பாடசாலைக்கு வரமுடியாதிருக்கிறேன். பாடசாலையை திரு. பீ.எம்.எம். பெர்னான்டோ நடப்பிப்பார்.

13.03.1942 - இன்று முஸ்லீம்களின் "ஒடுக்கத்துப்புதன்" என்ற பெருநாள் காரணமாக 26/178 பிள்ளைகள் மாத்திரம் சமுகமளித்திருந்தனர். ஆகையால் காலை 11.00 க்கு பாடசா லையை மூடுகிறேன்.

17.03.1942 - இன்று காலை 10.00 க்கு பு/அரசினர் ஆண் பாடசாலையிலுள்ள எனது நிவசத்தில் குரக்கன் சேமிப்பான் வேண்டி உடனே அறையைக் காலி செய்யும்படி கேட்டுக்கொள் ளப்பட்டபடியால் அதற்காக யான் காலை 10.00 மணிக்குப் பாடசாலைப் பொறுப்பை திரு.பீ.எம்.எம். பெர்னான்டோவிடம் ஒப்படைத்து விட்டு செல்கிறேன்.

20.03.1942 - இன்று இப்பாடசாலையை காலை 8.30 வரையில் வந்து பார்வையிட்டேன். பாடசாலை காலை 8.00 மணிக்கு ஆரம்பமாகியும் இதுவரையில் மிகக் குறைவான மாணவரே வந்திருக்கின்றனர். இப்பாடசாலையில் வரவு பொதுவாக இப்போ குறைவு. காரணம் யுத்த பீதியெனக் கூறப்படுகிறது.

-K. Sivapatham-

26.03.1942 - இன்று காலை 9.05 மணிக்கு பு/அரசினர் ஆண் பாடசாலையிலுள்ள சீனியைக் கொண்டுவருவான் வேண்டி 06 ஆம் வகுப்பு மாணவர்களிருவருடன் செல்லுகின்றேன். திரு. யூ.எஸ். ஷெய்கு அலி பாடசாலையை நடப்பிப்பார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

26.01.1944 - இன்று இப்பாடசாலையைப் பார்க்க வந்தேன். (9.00 A.M) 2/2 ஆசிரியரும் 60/109 பிள்ளைகளும் இருந்தனர். தோட்ட வேலை இன்னும் சிறப்பாக நடக்க இடமுண்டு. ஆசிரியரும் மாணவரும் நேரத்துடன் வந்து பெண் பாடசாலையாருடன் கூடி உதவி செய்யின் தோட்டவேலை கட்டாயம் திருந்த இடமுண்டு. வெங்காய மேடையில் புல் பூண்டு அதிகமிருந்தபடியால் செய்பயிர் அமுக்கி விடப்பட்டிருந்தது. அவற்றை நீக்கிப் பயிரை வளரச் செய்தல் வேண்டும். மிளகு கன்றுகளும் சிலவுள.

பிள்ளைகளுடைய ஒழுக்கம் சுத்தம் நடை உடை பாவனை யாவும் சிறப்புடையன. அவர்களுடைய பேச்சுத் திருத்தமடைகின்றதென்பதற்குத் தகுந்த சான்றுகள் பலவுள.

பிள்ளைகளை முயன்று வரப்பண்ண ஆசிரியரும் பெற்றாரும் சிரத்தை எடுக்க வேண்டும்.

**அ. வி. மயில்வாகணம் - வித்தியாதரிசி**

31.01.1950 - 02 ஆம் வகுப்பிலுள்ள 04 பிள்ளைகள் இடாப்பு அடையாளம் பண்ணிய பின் குளித்து விட்டு வருகிறதென சொல்லிப்போட்டுச் சென்றனர்.

01.08.1951 - இன்று காலை யான் நீராடச்சென்று 8.35 A.M க்குப் பாடசாலை சேர்ந்தேன்.

20.08.1951 - இன்று காலை 8 மணிக்கு ஒரு கலியாண வீட்டிற்குச் செல்கின்றேன். 10 மணிக்குத் திரும்பியதால் இன்றைய வரவு 0 அடையாளமிட்டேன்.

30.01.1952 - இன்று 30 பிள்ளைகளும் 02 ஆசிரியர்களுமாக அணிநடைப் பயிற்சி பெற பொலிஸ் மைதானத்துக்கு மு.ப.8.45 க்கு சென்றுள்ளார்கள்.

15.02.1952 - மன்னர் பிரானின் பிரேத அடக்கத் தினமாகிய இன்று அவரது பிரிவைக் குறித்து அனுதாபம் தெரிவிக்கும் முகமாகவும் மரியாதை செலுத்தும் முகமாகவும் 2 நிமிஷமௌனம் அனுஷ்டிக்கப்பட்டது.

1.3.1952 - இன்று இப்பாடசாலையின் பெற்றார் ஆசிரியர் சங்கமொன்று புத்தளப் பிரதிநிதி அல் ஹாஜ். கனம் H.S. இஸ்மாயில் அவர்களின் தலைமையில் நிறுவப்பட்டது. அவ்வமயம் சுமார் 40 பெற்றோர்கள் கூட்டத்துக்கு சமூகமளித்தனர். நடப்பு வருட அங்கத்தவர்கள் தெரிவு செய்யப்பட்டனர். இச்சங்கம் சார்பாக பெற்றோரும் ஆசிரியர்களும் அதிக ஆர்வாங்காட்டி ஒத்துழைத்தனர். கூட்டம் சிறப்பாக நடைபெற்றது.

03.03.1952 - இன்று A. றகுமதுல்லா, P. முஹம்மது இபுனுல் ஆகிய இரு மாணவர்களையும் வாழைப்பழம் எடுப்பதற்காக 9.30 மணியளவில் அனுப்பினேன். அவர்கள் 10.20 A.M திரும்பி வந்தனர்.

21.11.1952 - 05 ஆம் வகுப்பு "சொகல்சிப்" சோதனைக்கான ஒழுங்குகளை செய்வதற்காக இன்று இப்பள்ளிக்கூடத்துக்கு வந்தேன்.

**- கே. கணகசபாபதி -**

06.03.1953 - AVA 1028 Of 8.12.1952 AVA 950 Of 6.1.1953 ஆகிய கடிதங்களின் படி 4.3.1953ல் முதியோர் வகுப்பு இராப்பாடசாலையொன்று இப்பாடசாலையில் தொடங்கப்பட்டது. 18 மாணவர்கள் அன்று சமுகமளித்தனர்.

15.05.1953 - இன்று வித்தியாபகுதி சினிமாப்பட வாகனம் பாடசாலைக்கு சமூகமளித்தது. பாடசாலை மாணவர்களும் ஆசிரியர்களும் அயல் பள்ளிக்கூட மாணவர்களும் பெற்றோர்களும் தாய்மார்களும் முதியோர் வகுப்பு மாணவர்களும் பாடசாலைக்கு சமூகமளித்து படத்தைக் கண்டு களித்தனர். சுமார் 2000 பேர் சமூகமளித்தனர்.

20.11.1953 - இன்று முகம்மது நபி பிறந்த தினம் பகிரங்க விடுதலை நாளானதால் பாடசாலை மூடப்பட்டது.

23.11.1953 - இன்று மாலை 2.00 மணியளவில் எல்லா ஆசிரியர்களும் மாணவர்களும் புத்தளம் கார்ட்டினர் தியேட்டரில் காண்பிக்கப்பட்ட இலவச சினிமாப்படக் காட்சியைக் கண்டுகளித்தனர்.

16.03.1954 - 9.50 தொடக்கம் 10.20 வரையும் பிள்ளைகள் றேடியோ கேட்கும் நேரம். தலைமை ஆசிரியை ................ றேடியோ வைத்திருக்கும் அறைத் திறப்பு தராதபடியால் றேடியோ போடும் வசதி இல்லை. ஆகவே அந்த நேரத்தில் வகுப்புப் பாடங்கள் படிப்பிக்கப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரமுகர்கள் பதித்தவை......

01. கௌரவ. **C.W.W.** கன்னங்கர - முன்னாள் கல்வி அமைச்சர்

22.11.46 I paid a casual visit to the School Puttalam with Mr T.B. Jayah M.S.C. and Mr H.S. Ismail Chairman U.C. The School building has been erected only a couple of months ago by the Pest Control Department, but there is damage done which should be repaired at once. The [illegible] is large but the Staff is utterly inadequate and there is no English Teacher. The Education of the children of the Area has been badly neglected. The Head Teacher should revive the Parent Teacher Assn and hold quarterly meetings at which the importance of educating the children should be explained to them. The children are not being sent early to School. Greater activity should be displayed by the Staff in this matter.

C.W.W. Kannangara
Minister for Education

02. அல்ஹாஜ். **H.S.** இஸ்மாயில் - முன்னாள் சபாநாயகர்

28.5.69. I presided at the English Day performance by the children of their school. The preparation of the children at short notice and their performance was quite good in spite of handicaps. I have no doubt that better results will be shown next year.

[signature] 28.5.69.

03. கௌரவ. டட்லி சேனாநாயக்க - முன்னாள் பிரதமர்
கௌரவ. **C.P.D.** சில்வா - முன்னாள் காணி அமைச்சர்
கௌரவ. **A.F.** விஜேமன்ன - முன்னாள் நீதி அமைச்சர்

10.69 On my official visit to Puttalam Dist I had the opportunity of laying the foundation stone for the library and I am very happy the way I was received by the Staff and Students.

[signature]
Prime Minister

10.69 C.P. de Silva
Minister of Land

10.69 A.F. Wijemanne
Minister of Justice
10.69



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

04. கௌரவ. நிஸ்ஸங்க விஜயரத்ன - முன்னாள் கல்வி அமைச்சர்

20. It was pleasure to have come to a well disciplined College like Fatima where girls are so [illegible] orderly and obviously reflect the standards set up before them by the enthusiastic principal and her capable staff. The neat apparel of the children, the bright demeanours, the cleanliness of the building are most striking. I do hope that, with the support of the Department, this college will grow to a fuller stature and fulfil the aspirations of those involved in the development of the children here.

20.05.78

N. Wijeyeratne [signature]
Minister of Education

05. அல்ஹாஜ். **M.H.M.** அஷ்ரப் - முன்னாள் கப்பல் துறை, துறைமுகங்கள், புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சர், ஜனாதிபதி சட்டத்தரணி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர்


[illegible]


[signature] 14/2/98.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஸெய்னப் பாடசாலை
ஆரம்பிக்கப்படவுள்ள
பிற பகுதிகள்.
(படங்கள் இஸட்.ஏ. ஸன்ஹிர்)





நன்றிகள்
ஏ.எப்.எம். நசீம், எம்.ஆர்.எம்.மஸ்ரூர்
இவர்களுடன் பிரதியமைச்சரின்
காரியலாய அலுவலர்கள் அனைவருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- Designing
- Typesetting
- Offset Printing
- Screen Printing
- Web Designing
- Publishing
- Digital Printing
- Line Art Drawing
- Advertising
- Translation

digital inventions



des!gn lab

173-P2, George R.De. Silva Mawatha, Colombo - 13, Sri Lanka.
Tel +94 112 390 111, +94 773 720 028.
e-mail - designlab@gmail.com, anupriyan06@gmail.com

d i g i t a l i n v e n t i o n s

DEVI Printers

# DEVI PRINTERS

**Quality Offset Printers**

# 75, Pickerings Road, Colombo - 13.

Tel : 0114 962 526, Mobile : 0773 914 911


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




BARAKAH

ABC INVESTMENTS




# We Are No 1

## in Sharing with You




TIFL

Children's Investment Account




ABC INVESTMENTS LIMITED

A Member of the ABC GROUP

388, Galle Road, Colombo 03.

Tel: +94 11 53 786 00 Fax: +94 11 53 86 786

E-mail: barakah@abcinvestments.lk


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Printed by - Design lab, 173-P2, George R De Silva Mawatta, Colombo - 13. 0773720028